தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 70
11.08.2024

# காணாமல் ஆக்கப்படும் கறுத்தக்கொழும்பான்






வாழ்க்கை இலக்குகளை அடைய ஒரு படிநிலை...

10



சில்லறை வணிகத்தில் அமேசன் ஏற்படுத்திய புரட்சிகர மாற்றம்

16



யாழ்ப்பாணத்துக்கும் வருகிறது இன்டிகோ

18

# காணாமல் ஆக்கப்படும் கறுத்தக்கொழும்பான்

**கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தை பெரும்பாலும் தோல் நீக்கியும் நீக்காமலும் உண்ண முடியும். மாம்பழத்தின்கொட்டையில் இருக்கும்சாற்றைபற்களால் வறுகி வறுகி வெள்ளையாக்கிச் சிறுவர்முதல் பெரியவர்கள் வரை சுவைப்பதில் பேரின்பம் கொள்வர். அதெற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும்.**





**லதா கந்தையா.**

யாழ்ப்பாணம் என்ற உடன் நினைவுக்கு வருவது பனம்பழமும் கறுத்தக்கொழும்பான் மாம்பழமுமே என்றால் மிகை அல்ல.

யாழ்ப்பாணத்தாரை பனங்கொட்டை சூப்பிகள் என பட்டமளித்து கௌரவிக்குமளவுக்கு பனம் பழத்தை நினைவு கூறுவதோடு சரி. தேடி நுகர்வது தற்காலத்தில் மிகக் குறைவு. ஆனால் மாம்பழம் அவ்வாறானதல்ல. கோடைகாலத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் யாழ்ப்பாண சுண்ணக்கல் நன்னீரின் சுவையை திகட்டி பழச்சாறாக்கி விந்தை செய்யும் அதிசயம் கொண்டது.

மாம்பழத்தை நேரடியாகவே மரத்தில் இருந்து மாம்பழமாக பெற்று விட முடியாது. ஏனெனில் பழங்களை வேட்டையாடி உண்ணவும் மோப்பம் பிடித்து கொறிக்கவும் கொத்தவும் அணில் பிள்ளைகளும் காக்கைக்கூட்டங்களும் கிளிப்பிள்ளைகளும் முந்திக்கொள்ளும். இரவில் வௌவால்களும் வேட்டையாட தொடங்கி விடும்.

இதனால் நன்றாக முற்றிய மாங்காய்களை செங்காய்களாக (பழுக்கும் பருவம்) இருக்கும் போதே நான்கில் மூன்று பங்கை துநிலத்தில் விழாமல் பக்குவமாக பறித்தெடுத்தல் வழமை. மற்றைய ஒருபங்கு அணில்களுக்கும் பறவைகளுக்கும் விடுவதால் உயிரினப் பல்வகைமை காக்கப்படுகிறது.

பறித்த பழங்களை வைக்கோலால் அல்லது நெல்லுக்குள் அல்லது வேப்பிலையால் மூடிப்பழுக்க வைத்தல் இயற்கை முறை. அதில் சாப்பிடுவதற்கு போதியளவை எடுத்துக்கொண்டு, உற்றம் சுற்றத்துக்கும் பங்கிட்டுக் கொடுத்தும் விற்கக்கூடியதை விற்று வாழ்ந்தனர் யாழ்ப்பாணத்து மக்கள்.

கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தை பெரும்பாலும் தோல் நீக்கியும் நீக்காமலும் உண்ணமுடியும். மாம்பழத்தின்கொட்டையில் இருக்கும் சாற்றை பற்களால் வறுகி வறுகி வெள்ளையாக்கிச் சிறுவர்முதல் பெரியவர்கள் வரை சுவைப்பதில் பேரின்பம் கொள்வர். அதெற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும். இதனால் பற்க ளின் ஈறுகளில் மாமபழத்தின் தும்புகளும் சாறுகளும் படர்வதால் அவை உறுதி பெறுகின்றன. வெண்மை அடைகின்றன. தற்காலத்தில் நவநாகரிகம் என்ற போர் வையால் இந்த செயற்பாடுகள் அருகிவிட்டன.

மாம்பழத்தின் சதைப்பிடிப்பான பகுதியை சாப்பிடுவதிலும் ஒரு ரசனை பிறக்கும். மெல்ல பற்களால் கடித்து, நாவில் படரவிட்டு அப்பிடியே அரைக்கும் போது, நாசியில் நச்சென்று வாசணையோடு பழச்சாற்றின் ருசி கிறுகிறுப்பைக்கொடுக்கும். இதையெல்லாம் இன்றைய நவநாகரிகம் இழந்து கொண்டிருக்கின்றது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பதாக பெரும்பாலும் ஒவ்வொருவர் வீட்டு முற்றத்திலும் ஒரு மாமரம் இடம்பிடித்திருந்தது. இன்னார் வீட்டு மாம்பழம் சுவைமிக்கதென தேடி வேலியால் பறித்துண்ட சிறுவர்கள் ஏராளமாக இருந்தார்கள். பண்டமாற்றாக பகிர்ந்துண்டார்கள். எத்தனை பழங்கள் சாப்பிட்டோம் என்ற எண்ணிக்கை எல்லாம் யாரும் கணக்கிட இருப்பதில்லை.

அமர்க்களமான கறுத்தக் கொழும்பானின் வாசனை கைகளிலும் வாயிலும் கமகமக்கும். மாம்பழ வாசனை மூக்குக்கும் இதம் தரும். கை கழுவிய பின்னும் முக்கனியில் ஒன்றான முருகப்பிள்ளையின் காவியக்கதை சுமந்த பழத்தின் கமகமப்பு மனதுக்கு புத்துணர் வைத்தரும்.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நிலத்துண்டாடல்கள் மற்றும் வீதி அகலிப்புகள் புணரமைப்பபுகளால் ஏற்பட்ட வளர்ச்சி வீட்டுக்கு வீடு வீதியோரமாக கடைகளைக்கட்டி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடைகளைக்கட்டி வாடகைக்கு விடுவதால் கிடைக்கும் பகுதியளவு அல்லது நிரந்தர வருமானவழிவகைகள் மற்றும் கழிவகற்றல் நெருக்கடிகளால் வகைதொகையற்று முற்றத்தை நிறைத்துநின்ற மாமரங்கள் தறிக்கப்பட்டு விட்டன.

மாஞ்சருகுகளை அகற்றுவதற்கு இடப் பற்றாக்குறை மற்றும் சுகாதார பரிசோதகர்கள் கிராம அலுவலர்களினால் மாதந் தோறும் கண்காணிக்கப்படும் டெங்கு நுளம்பு பெருக்கம் போன்றவற்றை கட்டுப் படுத்துவதற்காக கொடுக்கும் நெருக்கடிகளும் மாமரங்களின் வெட்டுதலுக்கு ஒரு காரணமாகிவிட்டன. பலர் வேலைகளுக்கு தூர இடங்களுக்கு செல்வோராகவும், குறுகிய துண்டாடல் நிலங்களானதால் அயல்வீடுகளுக்குள்ளும் பழுத்த இலைகள் சருகுகள் விழுவதால் அயல்வீட்டுக்காரர்கள் கொடுக்கும் அழுத்தம் காரணமாகவும் பலர் மாமரங்களை தறித்துள்ளார்கள்.



மட்டுமன்றி தென்பகுதியில் இருந்து வந்த சில வியாபாரிகள் மாம்பலகைகளில் மேற்கொள்ளும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தந்திரமாக மாமரங்களை கவர்ச்சிகரமான பணத்தை கொடுத்து வாங்கி தறித்துக்கொண்டு செல்வதும் அண்மைக்காலத்தில் வெளிச்சத்துக்கு வந்த உண்மையாகும்.. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி முல்லைத்தீவு மன்னார் வவுனியா என இந்த கைவரிசை நீண்டிருப்பதானது கவலைக்கிடமானது. வடக்கு மாகாணத்தில் அன்றாடம் உழைத்துண்ணும் மக்களை மட்டுமன்றி படிப்பறிவில் மிகச்சிறந்த யாழ்ப்பாண மக்களையும் இந்த வியாபாரிகள் ஏமாற்றி கொண்டமை வியப்பானதே.

எங்கள் தொன்மைக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தில் பல்வேறு வகையான பயன்களும் நிறைந்து கிடக்கின்றன. கோடை காலத்தில் அதாவது சித்திரை தொடக்கம் ஆவணிவரையான காலப் பகுதியில் இவை அதிகமாகக்கிடைக்கும். வெப்பத்தை நன்கு உறிஞ்சிக்கனியும் பழங்களாகஇருப்பதால்உடலுக்குஉறுதியை தரும் வல்லமை கொண்டவை. நீர்த்தன்மை அதிகளவு காணப்படுவதால் உடற்சூடு குறையும். விற்றமின் A சத்து அதிகம் காணப்படுவதால் கண்பார்வை கூர்மை பெறும். புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலுடையது. உயர் இரத்த அழுத்தத்தை குறைக்கின்றது. இரத்தத்தி லுள்ள சக்கரை அளவை கட்டுப்படுத்தும். இதயத்துக்கு பலமானது. மாதவிடாய் ஒழுங்குடன் செயற்பட உதவுகிறது. மூளையை சுறுசுறுபேபடைய வைக்கிறது.நோயெதிர்ப்பு சக்தியுடையது.நரம்புத்தளர்ச்சியைபோக்குகின்றது. சிறுநீரககற்களை அகற்றுகிறது. உணவை சமிபாடடைய வைக்கிறது. மனச்சோர்வை நீக்கும் .

- ஆண்மையை அதிகரிக்கும் .
- உடல் உறுதி அதிகரிக்கும்.
- இரத்த உற்பத்திக்கு உதவுகின்றன.
- சமிபாட்டுபிரச்சனைகளுக்குதீர்வளிக்கும்.
- வாயுத் தொல்லையை நீக்கும்.,
- உடலுக்குப்புத்துணச்சியைஅளிக்கிறது.

பித்தத்தைப் போக்கி குடலுக்குப் பலம் தருகிறது.

- நாள்பட்ட தலைவலியை சீர் செய்கிறது.
- ஞாபகசக்திக்கும்ஊட்டமாகஅமைகிறது.
- கூந்தல் வளர்ச்சிக்கு உதவுகிறது
- முகப் பொழிவுக்கு உதவுகிறது..

ரத்தத்தில் உள்ள கொழுப்பையும் குறைக்கிறது. மாம்பழத்தை முகத்துக்கு பூசி கழுவும்போது புதிய அழகு ஒன்று பிறந்திருப்பதையும் அவதானிக்கலாம்.

ஆனாலும் மாம்பழத்தை உண்ண முடியாத வகைப்பாட்டுக்குள்ளும் சிலர் இருக்கலாம்.அளவுக்குமீறினால்அமிர்தமும் நஞ்சு என்பதற்கிணங்க அளவுகணக்கற்று உண்பதால் வயிற்றோட்டம் உருவாகிவிடும்.

நீரிழிவு நோயாளர்கள் வைத்திய ஆலோசனை பெற்று உண்ண வேண்டும்.

மாம்பழம்தொடர்பாகசிறுவர்பாடல்களும் உண்டு. சினிமாப்பாடல்களும் உண்டு. முக்கனிகளில் அதிகம் பாடல் பெற்ற பழம் மாம்பழமாகவே இருக்கும். தாய் தன் சேயை மாம்பழம் என செல்லமாக அழைக்கவும், காதலர்கள் காதலிகளை மாம்பழமாக வர்ணித்துப்பாடவும் பேறு பெற்ற பழம் மாம்பழம்.

'மாம்பழம் விற்கிற கண்ணம்மா உன்
மனசுக்குள்ளே என்னம்மா.....' என்ற பாட்டை பாடிக்கொண்டே மாம்பழங்கள் மலிவாக கிடைக்கின்ற காலத்தில் வாங்கி சாப்பிட்ட காலம் விரைந்து ஓடிவிட்டது. கொள்ளை விலை விற்கும் அளவிற்கு கறுத்தக்கொழும்பான் விலை கதிகலங்க வைக்கின்றது.

முன்பு மாம்பழ பருவ காலத்தில் நிறையவே வீதி வீதியாக வைத்து விற்பனை நடக்கும். வாகனங்களில் கொண்டு திரிந்தும் விற்பனை நடந்தது. ஆனால் இப்போது அதிக இலாபத்தை பெறும் நோக்கோடு எல்லாமே தென்பகுதியை நோக்கி பறந்து விடுகின்றது. மட்டுமன்றி கறுத்தக்கொழும்பானின் ருசி இப்போது இல்லை. மருந்தடிக்கப்பட்ட பழங்களை விலைகொடுத்து வாங்கி உண்ணும்போது மருந்துக்கலவைகள் வாந்தியை குமட்டலை செரிமானக்குறைவை ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை கொடுப்போர் இவ்வாறான பழங்களை வாங்குவதையும்உண்பதையும்தவிர்ப்பதே நல்லது.

கொழுத்தல் என்றால் பருமன்/ தசைப்பிடிப்பான /நிறையக்கிடைத்தல் எனப்பொருள் கொள்ளப்படும். நண்டு கொழுத்தால் வளையில் தங்காது என்பர். நண்டிற்கு நிறைவாக உணவு கிடைத்தால் அது ஓரிடத்தில் இருக்காது. ஓடித்திரியும் என்பது அதன்பொருள். அதேபோலவே கரும்பச்சைநிறத்தில்கறுத்துக்கொழுப்பதால் கறுத்துக்கொழுத்த மாம்பழம் காலப்போக்கில் காரணப்பெயராகி கறுத்தக்கொழும்பான் என்ற சிறப்புடன் உலாவத்தொடங்கிவிட்டது.

கறுத்தக்கொழும்பான் ஒரு நிறையுணவுக்கு நிகரான தசைப்பிடிப்பான முக்கனி.

மத்தியகோட்டுக்கு அருகிலே அமைந்துள்ள வெப்பவலய நாடுகளிலே பரவலாக இந்த மரம் காணப்பட்டபோதும் யாழ்ப்பாணச்சுண்ணக்கல்லின் நன்னீரில் விளையும் கறுத்தக்கொழும்பான் உலகிலேயே விசேட பேசுபொருளாகும். உலகெங்கும் பரந்து வாழும் யாழ்ப்பாணத்தவர்களின் விடுமுறைக்காலத்தேடலாக அமைவதும் இந்த கறுத்தக்கொழும்பானே.

கொழுத்தலைக்குறிக்க பயன்படுத்திய இந்தச்சொல் கொழும்பு மாவட்டத்தை குறிக்க பயன்படுவதாக கொள்ளக்கூடாது. இப்படி ஒரு மயக்கம் இருந்தால் தெளிவு கொள்ள வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் வரலாற்று இருப்பை நிலை நிறுத்துபவை நிலம் நீர் மண்வளம் சிறப்பான மரஞ்செடி கொடிகளே. அந்த வகையில் நன்கு திட்டமிட்ட வகையில் எமது யாழ்மாவட்டத்தை பிரதிபலிக்கும் கறுத்தக்கொழும்பானும் அதன் இயல்பையும் இருப்பையும் இழந்துபோகும் வகையில் செயற்பாடுகள் துரிதமடைந்துள்ளன. முக்கனிகளில் ஒன்றான மாம்பழம் அம்பலவி செம்பாட்டான் கிளிச்சொண்டன் விளாட்டு மல்கோவா புளிமாங்காய் என பலவகையுடையதாக இருந்தாலும் யாழ்ப்பாணத்து கறுத்தக்கொழும்பானுக்கே சிறப்பு அதிகம்.

அந்தச்சிறப்பை தக்கவைப்பதும் எதிர்காலச்சந்ததிக்கு பரிசளிப்பதும் மனச்சாட்சியுடைய ஒவ்வொருவர் மனங்களிலும் செயல்களிலுமே உள்ளது. நல்லதொரு குடும்பம் தனக்கென சிறப்புகளை கொண்டிருப்பதுபோல நல்லதொரு சமுதாயமும் தமக்கான சிறப்புகளை இழந்துவிடாது பாதுகாத்தல் அவசியமானதாகும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# வெற்று வாக்குறுதிதானா?

இலங்கை – இந்திய நாடுகளுக்கு இடையில் தொடரும் மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்தைகள் மூலமாகத் தீர்வைக்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார். தமிழக மீனவர் ஒருவர் நெடுந்தீவு கடற்பரப்பில் கொல்லப்பட்டதையடுத்து தமிழகத்தில் இந்தப் பிரச்சினை மீண்டும் கொதிநிலையை எடுத்துள்ளது. இந்தப் பின்னணியில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையுடன் நடத்திய சந்திப்பு ஒன்றின் போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த வாக்குறுதியை அளித்திருக்கின்றார்.

மீனவர் பிரச்சினை தொடர்வது இரு நாட்டு மீனவர்களுக்கும் தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது. இலங்கையில் வடபகுதி மீனவர்களின் வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. அவர்கள் கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. அதேவேளையில் தமிழக மீனவர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் எல்லை தாண்டி வரும் போது கைது செய்யப்படுகின்றார்கள். அல்லது, கடற்படையினரால் தாக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன. இதனால் அவர்களுடைய தொழிலும் பாதிக்கப்படுகின்றது. வாழ்வாதாரத்தை அவர்களும் இழக்கின்றார்கள்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வரும் போது, இலங்கைக் கடற்படையினர் அதனைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான். அதற்காகத்தான் கடற்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். மீனவர்கள் நீரோட்டத்தில் அடிபட்டு இலங்கைக் கடல் எல்லைக்குள் வருகின்றார்கள் என்று ஒவ்வொரு முறையும் சொல்லிவிட முடியாது. மன்னார் மற்றும் நெடுந்தீவு போன்ற பகுதிகளில் இந்திய மீனவர்களின் ஊடுருவல் என்பது நூற்றுக்கணக்கில் இடம்பெறுகின்றது. இவை நன்கு திட்டமிட்ட ஊடுருவல்களே தவிர, தற்செயலாகவோ நீரோட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமலோ இடம்பெறுபவையல்ல.

இந்த நெருக்கடியும் உயிரிழப்புக்களும், மீனவர்களின் போராட்டங்களும் நீண்டகாலமதாகவே இடம்பெறுகின்ற போதிலும், அவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. அந்தந்த நேரங்களில் உருவாகும் நெருக்கடிகளை சமாளிப்பதற்கான வாக்குறுதிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த செயற்திட்டங்களும் இரு நாட்டு அரசுகளிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரச்சினை தொடர்வதற்கு காரணம் அதுதான்! இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் கொடுத்துள்ள வாக்குறுதியும் வெற்று வாக்குறுதியாகவே அமையலாம்.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால், வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகவே பாதிக்கப்பட்டுவருகின்ற போதிலும், அதனை தடுத்துநிறுத்துவதற்கான செயற்றிட்டம் எதுவும் இலங்கை அரசாங்கத்திடமும் இல்லை. இது தொடர்பில் இரு நாட்டுப் பிரதிநிதிகளுடனான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவும் இல்லை. இவ்வாறு இரு தரப்பும் பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து நடந்துகொள்வது ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம்!

# ஒருவரைப் பணக்காரர் ஆக்குவது அதிக சம்பளமா? அதிக சேமிப்பா?

**பணமானது பணவீக்க விகிதத்தைவிட அதிக வருமானம் ஈட்டித் தருவதாக இருக்க வேண்டும். அந்த வகையில், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகாலத் தேவைக்கு, பங்குச் சந்தை நேரடி முதலீட்டுடன் ஒப்பிடும் போது, அதிக ரிஸ்க் இல்லாத பங்குச் சந்தை சார்ந்த திட்டங்களில் முதலீடு செய்து வருவது அவசியம். அல்லது தங்கத்தை வாங்கி வைத்திருக்கலாம்.**

**சிறீநாத் விஜய்**

நம்மில் பலர் அதிகம் சம்பாதிக்கிறார்கள். ஆனால், அவர்கள் வாழ்க் கையில் வளம் பெறாமல் பல்வேறு தேவைகளுக்கும் கடன் வாங்கிக் கொண்டிருப் பதைப் பார்க்க முடிகிறது. காரணம், அவர்கள் சரியான முறையில் பணத்தைச் சேமித்து முதலீடு செய்யாத துதான். ஒருவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார், எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பது முக்கியமில்லை. அவர் சம்பளத்தில் எவ்வளவு சேமிக்கிறார் என்பதில்தான் அவர் பணக்காரர் ஆவது இருக்கிறது. நம்மில் பெரும்பாலோர் சம்பளத்தில் செலவு போக மீதியைச் சேமிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறோம். இப்படி, செலவு போக மீதியைச் சேமிக்கும் நிலையில் பல மாதங்கள் நம்மால் சிறிதுகூட சேமிக்க முடியாமல் போய்விடும்.

உதாரணமாக, குடும்பத்தில் திருமணம் உள்ளிட்ட விஷேசங்கள் நடக்கும் மாதங்கள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகள் வரும் மாதங்களில் குடும்பத்தில் வழக்கத்தைவிட செலவு அதிகமாகிவிடும். அந்த மாதங்களில் பெரும்பாலும் சேமிக்க முடிவதில்லை. செலவு போக மிச்சமாகும் பணத்தை பெரும்பாலும் வங்கிச் சேமிப்புக் கணக்கில் அல்லது உண்டியலில் சேர்த்து வைக்கிறோம். இது தவறான சேமிப்புப் பழக்கம்.

வங்கிச்சேமிப்புக்கணக்கில் இருக்கும் தொகைக்கு ஆண்டுக்கு 3 – 4 வீத வட்டி வருமானம் கிடைக்கும். சேமிப்புக் கணக்குகளுக்கு இலங்கையிலுள்ள வங்கிகளின் வீதம் அவ்வளவுதான். உண்டியலில் இருக்கும் பணத்துக்கு இந்த வட்டிகூடக் கிடைக்காது. நாட்டில் பணவீக்க விகிதம் என்கிற விலைவாசி உயர்வு சுமார் 7% இருக்கும் நிலையில், பணம் இப்படி வளராமல் இருப்பது இதனைச் சேமிப்பது இழப்பு.

இந்த நிலையைத் தவிர்க்க, சம்பளத்தில் குறிப்பிட்ட சதவிகிதத் தொகையை ஆரம்பத்தில் சேமிப்புக்கு என ஒதுக்கிவிட வேண்டும். அந்தத் தொகையும், தானியங்கி முறையில் முதலீட்டுக்குச் சென்றுவிட வேண்டும்.

சம்பளத்தில் சேமிப்பு என்பது ஆரம்ப ஆண்டுகளில் 10% அளவுக்கு இருக்கலாம். சம்பளம் அதிகரிக்க அதிகரிக்க இது அதிகரித்து வந்தால் முக்கிய நிதி இலக்குகளான பிள்ளைகளின் உயர் கல்வி, கல்யாணம், சொந்த வீடு, பணி ஓய்வுக் காலம் ஆகியவற்றுக்குத் தேவையான தொகையை சுலபமாகவும் விரைவாகவும் சேர்த்துவிட முடியும்.

பணமானது பணவீக்க விகிதத்தைவிட அதிக வருமானம் ஈட்டித் தருவதாக இருக்க வேண்டும். அந்த வகையில், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகாலத் தேவைக்கு, பங்குச் சந்தை நேரடி முதலீட்டுடன் ஒப்பிடும் போது, அதிக ரிஸ்க் இல்லாத பங்குச் சந்தை சார்ந்த திட்டங்களில் முதலீடு செய்து வருவது அவசியம். அல்லது தங்கத்தை வாங்கி வைத்திருக்கலாம்.

மூன்றாண்டுகளுக்குக் குறைவான நிதி இலக்குகளுக்கு நிலையான வைப்பில் பணத்தை முதலீடு செய்யலாம். ஒருவர் பணக்காரர் ஆவதற்கு அவரின் அதிக சம்பளம் முக்கியமா, அதிக சேமிப்பா என்றால் சேமிப்பு என் பது தான் பதில். அது எப்படி என்பதைப் பார்ப்போம்.

கண்ணன், மணி இருவரும் கல்லூரித் தோழர்கள் இருவரும் ஒரே நிறுவனத்தில் ஒரே சம்பளத்தில் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்கள் இருவரின் மாதச் சம்பளம் ஒரு லட்சம் ரூபா. கண்ணன் அதில் 5%, அதாவது மாதம் ரூ.5,000 சேமித்து வருகிறார். இதுவே, மணி அவர் சம்பளத்தில் 25%, அதாவது மாதம் ரூ.25,000–சேமித்து வருகிறார்.

கண்ணனின் முதலீட்டுக்கு ஆண்டுக்கு சராசரியாக 15% வருமானம் கிடைக்கிறது என வைத்துக்கொள்வோம். இதுவே, மணியின் முதலீட்டுக்கு ஆண்டுக்கு சராசரியாக 9% வருமானம் கிடைக்கிறது என வைத்துக்கொள்வோம். 25 ஆண்டுகளுக்குப் பிறகு யார் கணக்கில் அதிக தொகை சேர்ந்திருக்கும்?

கண்ணனிடம் ரூ.1.38 கோடி இருக்கும் நிலையில், மணியிடம் ரூ.2.66 கோடி சேர்ந்திருக்கும். காரணம், கண்ணனின் முதலீட்டுத் தொகை மிகக் குறைவு.

நீங்கள் கண்ணன் வழியா, மணி வழியா..? சிந்தித்துச் செயல்பட்டு அதிக பணத்தைச் சேருங்கள்!

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
11.08.2024




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,87,550 ரூபா.**

**24 கரட் தங்கம் 204,550 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**

# பனை மரங்களின் மகத்துவத்தை எடுத்தியம்பிய நுங்குத் திரு விழா

**வாஸ் கூஞ்ஞ**





மன்னார்மாவட்ட உள்ளூர்உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் அமுலாக்கத்துடனும் வன்னி மண் அறக்கட்டளை அனுசரணையுடனும் நுங்கு விழா மன்னாரில் நடைபெற்றது.

இவ்விழாவானது நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் முன்பாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

இது தொடர்பாக உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தின் பாரம்பரியமான பனை மற்றும் தென்னை மரங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடையேயாகும். இதிலும் அழிந்துபோகும் பனை மரங்களை யாவரும் அக்கறையுடன் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனா.

இவைகள்தொடர்பானஎமதுமன்னாா் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிப்படுத்தலும்விற்பனைநிலையமும் மன்னார் மாவட்ட செயலகப் பகுதியில் மக்களுக்குவிழிப்புணர்வைஏற்படுத்தவும் , பிரயோசனம் அடையவும் முக்கிய இடத்தில் இதற்கான விற்பனைநிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே பொது மக்களும் பாவனையாளர்களும் எமது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்குடனும் , எமது மன்னார் வளத்தின் பனை மரங்களின் மகத்துவத்தை எடுத்தியம்பும் ஒரு நோக்குடனேயே இந்த நுங்கு விழாவை நாங்கள் நடாத்த தீர்மானித்தோம்என்று அவாகள் தெரிவித்தனா்.









| | |
|---|---|
| கத்தரிக்காய் | 300/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 400/= |
| தக்காளி | 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | 160/= |
| கோவா | 350/= |
| கரட் | 350/= |
| வாழைக்காய் | 250/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 500/= |
| வெண்டக்காய் | 160/= |
| பயற்றங்காய் | 350/= |
| பீற்றுாட் | 350/= |
| முருங்கக்காய் | 100/= |
| தேங்காய் | 600/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 193/= |
| கனடா டொலர் - | 214/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 322/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 222/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 379/= |
| சுவிஸ் பிராங் - | 344/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 224/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 336/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 232/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 360/= |
| அமெரிக்க டொலர் - | 307/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

**அருங் கடி மூதூர் மருங்கில் போகி, யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு, நாழி கொண்ட, நறு வீ முல்லை அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது**

பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப (முல்லைப்பாட்டு-10,காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்).

முந்தி எங்கட ஊரிலை ஈச்சம் பழம் விக்கிறதைச் சில பெண்டுகள் தொழிலாச் செய்தவை. அவை பள்ளிக்க வாசல்களிலை இல்லாட்டில் கோயில் வாசல்களிலை இருந்து விப்பினம் ஒரு சுண்டு பழம் அப்ப பத்சம் .

சுண்டு எண்டு நாங்கள் சொல்லுறது பழைய ரின்பால் பேணி . ரின்பால் முடிஞ்சதும் பால் எடுக்க ஓட்டை போட்ட அதுகின்ரை பக்கத்தை சீமெந்துக் குந்திலை இல்லாட்டில் திண்ணையிலை கவிட்டு வைச்சு பத்துப் பதினைஞ்சு தரம் நல்லா ஊண்டி முன்னுக்கும் பின்னுக்கும் சறக் பறக் எண்டு இழுக்க அந்த மூடி கழண்டு வரும். உப்பிடித் தகரப்பேணி சத்தம் போடுறதை உன்ரை கோச்சி புறுபுறுக்கிற மாதிரி இருக்கெண்டுவார் அப்பு .

இப்பிடி ஒரு பக்க மூடி கழண்ட பால்ப் பேணி யைத்தான் நாங்கள் சுண்டு எண்டுவம் .

உந்தச் சுண்டாலைதான் முந்தி நாங்கள் அரிசி , மா , சீனி, தூள் எல்லாம் அளக்கிறனாங்கள் . அதுமாதிரி அயலட்டைப் பெண்




டுகள் மா சீனி எண்டு அயலட்டையுக்கை இரவல் குடுக்க வாங்க உந்தச் சுண்டுகளைத்தான் பாவிச்சவை . அதோட குழைச்ச மாவைச் சுளகில போட்டுப் புட்டுக் கொத்தவும் உதைத்தான் பாவிச்சவை .

அப்ப முந்தி உந்தச் சுண்டு அயலட்டையுக்கை குடுக்கல் வாங்கல் செய்ய உதவி செய்து ஒரு சமாதானத் தூதுவர் மாதிரித்தான் சேவை செய்து இருந்திருக்குது எண்டு சொல்லி அப்பு சிரிப்பார்.

மூண்டு சுண்டு எண்டது ஒரு கொத்துக்குச் சமன் . கொத்து எண்டது மரத்திலை செய்து இருக்கும் . நாலு சுண்டு ஒரு சேர் எண்டுவம் . உந்தச் சேர் எண்டது பித்தளையில செய்து இருக்கும் .

மூண்டரைச் சுண்டு ஒரு கிலோவுக்குச் சமன் அப்ப ஒரு சுண்டு எண்டது கிட்டத்தட்ட இருநூற்றி எண்பத்தைஞ்சு கிராம் வரும் .

முந்தி எங்கட ஊர் சந்தை வழியை அரிசி விக்கிற பெண்டுகள் உந்த சுண்டு கொத்து சேர் மூண்டையும் பாவிச்சுத்தான் அரிசி வியாபரம் செய்தவை . அவை அரிசி விக்கிற பெண்டுகள் சரியான கண்டிப்பும் சண்டித்தனமும் உள்ள ஆக்கள் எண்ட படியாலை அவைக்கு வாயும் பேசும் குண்டியும் பேசும் எண்டு ஆக்கள் பறையிறவை .

தனிய அரிசி மட்டும் எண்டில்லை மற்றத் தானியங்களையும் அளக்க எங்கட ஆக்கள் உந்த சுண்டு கொத்து சேர் மூண்டையும் பாவிச்சவை . இருபத்தி எட்டுக் கொத்து ஒரு புசல் இல்லாட்டில் ஒரு பறை . முந்தி கன கமக்காரர் வீடுகளிலை உந்தப் பறை இருந்தது கண்டியோ எண்டுவா ஆச்சி.

எங்கட சாமத்திய வீடுகளிலை நிறை நாழி வைக்கிறதுக்கு உந்தக் கொத்தைப் பாவிக்கிறவை எண்ட ஆச்சி கொத்துக்கு நாழி எண்டும் பெயர் எண்டுவா . நிறை நாழி எண்டது மங்கள காரியங்கள் நடகேக்கை மங்கள கரமாக இருக்க வேணும் எண்டு கொத்து நிறைய வெள்ளை நெல்லை நிரப்பி வைக்கிறது எண்டிற ஆச்சி எங்கட சாமத்திய வீடுகளில உந்த நிரப்பின நெல்லிலை சத்தகத்தைக் குத்தி அதிலை தேசிக்காயும் குத்தி வைப்பினம் எண்டுவா.

சில இடங்களிலை கலியாண வீடுகளிலையும் குடி பூரல் வீடுகளிலையும் உப்பிடி நிறை நாழி வைப்பினம் எண்டிற ஆச்சி உப்பிடி நிறை நாழி வைக்கிறது எண்டது அந்தக் காலத்திலையும் நடந்திருக்குது எண்டு பரிபாடலிலை இருக்குது எண்டு அந்தப் பாட்டைச் சொன்னா

'ஆர் ததும்பும் அயில் அம்பு நிறை நாழி' (பரிபாடல் – 18).

முந்தி அந்தக்காலத்திலை ஒரு காரியம் செய்ய முந்தி கோயிலுக்குப் போய் சாமியைக் கும்பிட்டு ஆரும் நல்ல சொல் சொல்ல மாட்டினமோ எண்டு காத்துக்கொண்டு நிப்பினமாம் உதை விரிச்சி கேட்டல் எண்டு சொல்லிறவை .

உப்பிடி விரிச்சி கேக்க வீட்டிலை இருக்கிற வயது போன பெண்டுகள் தான் போவினம் உவையை பெருமுது பெண்டிர் எண்டு சொல்லிறவை. உப்பிடி விரிச்சி கேக்கேக்கை உந்தை நிறை நாழி வைக்கிற பழக்கம் இருந்திருக்குது எண்ட விஷயம் முல்லைப் பாட்டிலை ஒரு இடத்திலை சொல்லி இருக்குது எண்டிற ஆச்சி அந்தப் பாட்டைச் சொன்னா .

'அருங் கடி மூதூர் மருங்கில் போகி,
யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட, நறு வீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப' (முல்லைப்பாட்டு-10 ,காவிரிப் பூம் பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்).

உந்தப் பாட்டின்ரை அர்த்தம் என்னண்டால் ஒரு அரசன் போருக்குப் போனவன் கன காலம் திரும்பி வரேல்லை . அவள் அரசிக்கு உவன் கோதாரி விழுவான் போனவனைக் காணேல்லை எண்டு சரியான கவலையாப் போச்சுது அதுகும் பொழுது படப் பொழுது பட தனியப் படுக்கேக்கை அவளுக்கு உந்தக் கவலை கூடி அந்தரப் பட்டு ஆதளி மாதளிப் படுவாளம் . உதைப் பாத்த அங்கை அரண்மனையிலை இருந்த கிழடியள் கொஞ்சப் பேர் என்னடி இவள் இந்த மறுகு மறுகிறாள் எண்டு போட்டு கோயிலுக்குப் போய் நிறைநாழி வைச்சு விரிச்சி கேட்டவையாம் எண்டா ஆச்சி .

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் கேட்டுக் கொண்டு இருந்த அப்பு அது சரி நிறை நாழி வைக்கேக்கை உந்த சத்தகம் குத்தி வைக்கிறதைப் பற்றி எங்கேயும் இருக்குதோ எண்டு கேட்டார் . அதைக் கேட்டுச் சிரிச்ச ஆச்சி அப்பிடி ஒரு பாட்டிலையும் இருக்கிற மாதிரித் தெரியேல்லை ஆரும் எங்கட விழுவாங்கள் சத்தகத்தை இடையில செருகி இருப்பங்கள் எண்டா .



# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குழநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு **கற்பகவனம்** செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

# நீரின்றி அமையாது இவ்வுலகு

**கனகாம்பிகைக் குளத்தின் நீர்க்கரையை மண் கொட்டி நிரப்பி காணியொன்றை உருவாக்கிய ஒரு செல்வந்தருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். ஒரு ஏக்கருக்கும் அதிகமான நிலத்தை அவர் டிப்பர் கொண்டு மண் கொட்டி நிரப்பியுள்ளார். அவரைத் தொடர்ந்து மேலும் சிலர் முயல்வதற்கு முன்பாக அந்த சம்பவத்தை மக்கள் பார்த்துவிட்டனர்...**

## பார்வை – 01



**தமிழ்க்கவி**

அண்மையில் கிளிநொச்சியில் ஒரு விசேஷம். அதை விசேஷம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இன்றைய மக்கள் மாக்களாக மாறி வெகு காலமாகிவிட்டது. அவர்களுக்கு தமது வளவிற்குள் தமது வீட்டிற்குள் தமது கைகளை மீறி நடக்கும் பல சம்பவங்களை வேடிக்கை பார்க்க மட்டுமே முடிகிறது.

அதை நான் சொல்ல காரணம் உண்டு. ஒரு பெண் அன்றாடம் குடித்துவிட்டு வரும் கணவனிடம்தான் எவ்வளவு வேதனைகளை அடி உதைகளை வாங்கினாலும், வீட்டின் பொருளாதாரம் மோசமாகப் போனாலும், அல்லது அதனால் அயலவர்கள் பாதிக்கப்பட்டாலும், அடுத்த நாளில் கணவனுக்கு குடிப்பதற்கு பணமில்லாதபோது அவளே கொடுத்தனுப்புவதைக் காணலாம்.

இதற்காக தனது பிள்ளைகள் பட்டினி கிடப்பதையும் அவள் பொறுத்துக்கொள்வாள். ஏன்ன விநோதமான செய்கை நான் பல





பெண்களிடம் இதுபற்றிக் கேட்டிருக்கிறேன். அவர்களது பதில், நானாக காசு கொடுக்காது போனால் அவன் வீட்டிலுள்ள எதை யாவது திருடி விற்றுவிடுவான். அல்லது காரணமேயில்லாமல் பிள்ளைகளுடனும் என்னுடனும் சண்டை போடுவான். எனவே கொடுத்துத் தொலைய வேண்டியுள்ளது. இந்தப் பதில் எத்தனை பேருக்கு பிடித்திருக்கிறது என்பதைவிட அது எத்தனை பேருடைய பதிலாக உள்ளது என்பது பெரிய வேடிக்கை. வீட்டிற்குள் நடக்கும்

இதே அநியாயங்களின் படிமுறையில்தான் தனது வீட்டிற்கு வெளியே நடப்பதையும் கணிப்பிட வேண்டியுள்ளது. அவர்கள் எதையும் அமைதியாக பொறுத்துக் கொள்ளப் பழகிவிடுகிறார்கள். இதைவிட இன்னும் மோசமான பலவற்றிக்கு நான் உதாரணம் சொல்கிறேன். அதற்கு முன் கிளி நொச்சியில் நடந்த ஒரு சம்பவத்தை பார்க்கலாம்.

கனகாம்பிகைக் குளத்தின் நீர்க்கரையை மண்கொட்டி நிரப்பி காணியொன்றை உருவாக்கிய ஒரு செல்வந்தருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த சம்பவம் தான் அது. ஒரு ஏக்கருக்கும் அதிகமான நிலத்தை அவர் டிப்பர்கொண்டு மண் கொட்டி நிரப்பியுள்ளார். அவரைத் தொடர்ந்து மேலும் சிலர் முயல்வதற்கு முன்பாக அந்த சம்பவத்தை மக்கள் பார்த்துவிட்டனர்.

குளங்களின் உள்ளே மண்ணை வெட்டுவதற்கே பழங்கால குடிமக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எனது பேரனார் குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடிக்கச் சென்ற போதெல்லாம் என்னையும் என் சகோதரர்களையும் அழைத்துச் செல்வார். எங்களுக்கும் சிறு சிறு தூண்டில்கள் செய்து தருவார். தூண்டிலில் கொழுவும் இரைக்காக நாங்கள் மணி புழுக்களை வீட்டில் வாழைமரத்தடியிலோ சட்டிபானைகள் கழுவும் ஈர மண்ணிலோ வெட்டிஎடுத்து அதை ஒரு பெரிய சிரட்டையில் எடுத்துச் செல்வோம். நாங்கள் மாங்கன்



மீனைப் பிடித்தால் தாத்தா அதை வாங்கி பெரிய தூண்டிலில் கொழுவி ஆழமான நிழற்பகுதியில் போடுவார். அது விரால் தூண்டில். நாம் கொண்டுசென்ற புழு முடிந்து போனால் குளத்தின் கரையில் புழு வெட்ட முனைவோம். என் பேரனார் அதை அனுமதிக்க மாட்டார். காரணம் நாம் கொத்துகின்ற மண் மழை வரும் போது கரைந்து குளத்திற்குள் செல்லும். அதனால் குளம் ஆழமற்றுப் போய்விடும் நீரின் கொள்ளளவு குறையும். எனவே குளத்தின் அலைகரையில் மண்அல்ல எதற்காகவும் நிலத்தை கிளறக்கூடாது.

ஆம். கனகாம்பிகைக் குள மக்கள் கிளர்ந்தெழக் காரணமானது அந்தக் குளத்தின் உட்பரப்பில் கொட்டப்பட்ட மண்ணும் அங்கே காணியை உருவாக்கிய மனிதரும்தான். இதுவரை நமது பிரதேசத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கையும் நபர்களும் வகைதொகையின்றி பெருகியுள்ளார்கள். இவர்களால் அடாத்தாக பிடிக்கப்படும் நிலமானது. வெகுநாட்களுக்கு இவாகளது ஆட்சியில் இருப்பதில்லை. ஒரு அளவுக்கு அதன் அடையாளங்கள் அவர்களது ஆட்சியிரிமையாக மாறியதும். அந்த நிலம் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கிலல்ல இலட்சக்கணக்கான ரூபாய்களை விலையாகப்பேசி வாங்கிக் கொண்டு அதை கைப்பற்றியவர் போய் விடுவார்.

அதனை வாங்கியவர் மிக நேர்த்தியாக ஒரு மாடிவீட்டைக்கட்டி மதிலும் கட்டி பூட்டி வைக்கிறார். அதுமட்டுமல்ல அனைத்துலக சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவர் கட்டடங்களை கட்டவோ அதை பாதுகாக்கவோ எந்த அரச அனுமதிகளையும் பெறுவதில்லை. கடவை போட ஒரு தூண் கட்டவும் அனுமதி கொரும் பிரதேச அமைப்புகள் எதுவும் இதை கேட்பதில்லை. நீர்ப்பாசன திணைக்களம் என ஒன்று உள்ளதாம் அதற்கும் தனது எல்லை எதுவென தெரியாது. அந்த ஊழியர்களுக்கு அவர்களது மாதாந்த கடமைப் பட்டியல்களில் இவை எதுவும் அடங்கவில்லை.

உண்மையில் இன்னும் தாம் வாழ ஒரு துண்டுக் காணிகூட இல்லாத ஏழை மக்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்படி ஒரு புறம்போக்கு நிலத்தை பிடித்து ஒருகொட்டில்போடக்கூட வசதிஇருப்பதில்லை. ஆனால் இந்த அமகடத்து நிலங்களில் வேலை செய்யும் கூலிகளாக அவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு குளங்களின் கீழும் விவசாயம் செய்யும் மக்களில் பெரும்பகுதி குத்தகைச் செய்கையாளர்களாகவே இருப்பதால், வருகிற நீரை பயன்படுத்துவதேயல்லாமல் வரும் வழிகளை செப்பம் பண்ணும் உரிமையற்றவர்களாக உள்ளனர்.

பல குளங்கள் காணாமல் போயுள்ளன. அவற்றை தொலைத்தவர்களுக்கு அத்திப்பட்டியைத் தேடிய கதாநாயகனைப் போல ஒரு வீரமான உறுதியான துணை கிடைக்கவில்லை. ஏனெனில் இப்போது நிலைமை அப்படித்தானுள்ளது. கனகாம்பிகைக்குள மக்களை வழிநடத்த ஒரு தலைவன் இருந்திருக்கிறான் என்பது எவ்வளவு சரியானதோ ஏனைய குளங்களைப்பற்றி பேசவும் தலைவர்கள் முன்வர வேண்டும்.

எல்லாவற்றிலும் கவனம் கொண்டு தமது பார்வையை நீண்ட கோணத்தில் செலுத்தவல்ல ஒரு தலைமை நாட்டுக்கு மிக அவசியமாக உள்ளது. எமது கண்முன்னே களவு போகும் எமது நாட்டின் சொத்துகள் எமது சந்ததியின் வாழ்வாதாரம் என்பதைஒவ்வொருவரும்புரிந்துகொள்வது மிக அவசியம். அதிலும் குறிப்பாக வன்னி கடலற்ற ஊர் இங்கே பெரு வளமாக உள்ளவை குளங்கள்தான். இந்த குளங்கள் படிப்படியாக அழிவதை பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பதே முதல் துரோகம்.

வசதியற்ற காணியற்ற வாழ வழியற்றவர்களால் இந்த திருட்டு நடைபெறவில்லை. வசதியற்ற வாழ்வாதாரமற்ற மக்களின் குடிநீரையும் பறிக்கும் திட்டங்களே இந்த குளக்காணி அபகரிப்புகள். நாம் பேசுவோம் தொடர்ந்து எமது குளங்களைத் தேடுவோம். அதுதான் எமது வாழ்க்கைக்கு மட்டுமல்ல நமது சந்ததிக்குமான பெரிய தேட்டம். 'நீரின்றி அமையாது இவ்வுலகு'

## தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்

# வாழ்க்கை இலக்குகளை அடைய ஒரு படிநிலை...






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் புதிய வியாபாரத்தை தொடங்க விரும்பும் தனிநபர்களுக்கு தனியார் வரையறுக் கப்பட்ட நிறுவனம் பதிவு செய்வது ஒரு சிறந்த தேர்வாகும். வரையறுக்கப்பட்ட பொறுப்பு, அதிகரித்த நம்பகத்தன்மை, வரி சலுகைகள் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் உள்ளிட்ட பல நன்மைகளை வழங்குகின்றது. திட்டமிடல், நிபுணர் ஆலோசனை மற்றும் கடின உழைப்புடன், தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் உங்கள் வாழ்க்கை இலக்குகளை அடைய ஒரு பயனுள்ள கருவியாக இருக்கும்.

இலங்கையில் தனியுடைமை, பங்குடமை மற்றும் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங் கள் இலங்கையில், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் தங்களது நிறுவனங்களை தனியுடைமை, பங்குடமை மற்றும் தனியார் வரையறுக் கப்பட்ட நிறுவனங்கள் போன்ற முறைகளில் நடத்துவது பொதுவான நடை முறையாகும்.

### தனியுடைமை:

» ஒரு தனி நபர் தனது சொந்த முடிவுகளின் அடிப்படையில் வியாபாரத்தை நடத்தும் முறை.

» வரம்பற்ற பொறுப்பு: வணிகத்தின் கடன்கள் மற்றும் கடமைகளுக்கு தனிநபர் முழுமையான பொறுப்பாளியாவார்.

» எளிமையான அமைப்பு மற்றும் நிர்வாகம்.

» வரி நன்மைகள் குறைவாக இருக்கலாம்.

### பங்குடமை:

» இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இணைந்து வியாபாரத்தை நடத்துவது.

» ஒவ்வொரு பங்குதாரரும் வியாபாரத்தின் இலாபம் மற்றும் இழப்பில் பங்கேற்பார்கள்.

» பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருக் கலாம், அதாவது ஒவ்வொரு பங்குதாரரும் தங்கள் முதலீட்டிற்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட அளவிற்கு மட்டுமே பொறுப்பாளியாவார்கள்.

» தனிப்பட்ட சொத்துக்கள் பாதுகாக்கப்படலாம்.

» கூடுதல் முதலீடு மற்றும் நிபுணத்துவத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

### தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (Pvt Ltd):

» தனியுரிமை மற்றும் பங்குடமை முறைகளின் சில நன்மைகளை இணைக்கும் ஒரு முறையான வணிக அமைப்பு.

» ஒரு தனிப்பட்ட நிறுவனம், அதாவது அதன் உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு பங்குகளை விற்க முடியாது.

» வரையறுக்கப்பட்ட பொறுப்பு: நிறுவனத்தின் கடன்கள் மற்றும் கடமைகளுக்கு உறுப்பினர்கள் தங்கள் முதலீட்டிற்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட அளவிற்கு மட்டுமே பொறுப்பாளியாவார்கள்.

» நிர்வாக அமைப்பு: இயக்குநர்கள் குழு மூலம் நிறுவனம் நிர்வகிக்கப்படுகின்றது.

» வரி நன்மைகள் மற்றும் நிதி உதவி பெற வாய்ப்புகள் அதிகம்.

» வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு ஏற்றது.

### இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் வரையறுக்கப் பட்ட நிறுவனங்களின் பங்களிப்பு:

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், தேசிய வருமானத்தை அதிகரிக்கவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் அவை உதவுகின்றன. வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கும், தொழில்நுட்பம் மற்றும் அறிவை இறக்குமதி செய்வதற்கும் அவை உதவுகின்றன. இலங்கையை ஒரு வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான இலக்கை அடைய தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

இலங்கையில், தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (Pvt Ltd) பதிவு செய்வது, ஏற்கனவே தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்படாத மற்றும் புதிதாக வியாபாரம் தொடங்க விரும்பும் தனிநபர்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான வாய்ப்பாகும். இது பல நன்மைகளை வழங்குகின்றது, அவை தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கை இலக்குகளை அடைய உதவும்.

### இலங்கையில் தனியார் வரை யறுக்கப்பட்ட நிறுவனத்தை எவ்வாறு பதிவு செய்வது?

இலங்கையில் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை பதிவு செய்வது எளிமையான செயல்முறை ஆகும். இலங்கை நிறுவன பதிவாளர் திணைக்களம் (Department of Registrar of Companies) மூலம் பதிவு செய்யலாம்.

தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் பதிவு செய்வது எப்படி?

1. நிறுவனத்தின் பெயரை தேர்ந்தெடுத்து, அதன் கிடைக்கும் தன்மையை உறுதி செய்யவும்.

2. கம்பனிச் சட்டத்தின் கீழ் தேவையான ஆவணங்களை தயார் செய்யவும்.

3. பதிவு கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை செலுத்தவும்.

4. தொடர்புடைய அரசு அமைப்புகளுடன் பதிவு செய்யவும்.

5. வருடாந்திர அறிக்கைகளை தாக்கல்




செய்யவும் மற்றும் சட்ட விதிமுறைகளை பின்பற்றவும்.

### தொடங்குவதற்கு உதவி:

இலங்கை அரசாங்கம் புதிய வியாபாரங்களை ஊக்குவிக்க பல்வேறு சேவைகளை வழங்குகின்றது. தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் பதிவு செய்வது மற்றும் வணிகத்தை நடத்துவது தொடர்பான தகவல்களைப் பெற பின்வரும் ஆதாரங்களைப் பார்க்கவும்:

» இலங்கை தனியார் நிறுவனங்கள் திணைக்களம்

» இலங்கை முதலீட்டு வளர்ச்சிச் சபை

» சுயதொழில் மற்றும் றீனிசி அபிவிருத்தி அமைப்பு

### கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்:

» தொழில் திட்டம்: வெற்றிகரமான வணிகத்திற்கு ஒரு திட்டமிட்ட அணுகுமுறை அவசியம். வணிக யோசனை, இலக்கு சந்தை, நிதித் தேவைகள் மற்றும் வளர்ச்சி திட்டத்தை உள்ளடக்கிய விரிவான தொழில் திட்டத்தை உருவாக்குவது முக்கியம்.

» ஆலோசனை: நிறுவன கட்டமைப்பு, ஒப்பந்தங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பற்றிய ஆலோசனை பெறுவது நல்லது.

» நிதி மேலாண்மை: வலுவான நிதி மேலாண்மை முறை அவசியம். இது வருமானம் மற்றும் செலவுகளை கண்காணிப்பது, வரவு செலவுத் திட்டம் தயாரிப்பது மற்றும் நிதிநிலை வரிக்கணக்குகளை பராமரிப்பது போன்றவற்றை உள்ளடக்கும்.

» சந்தைப்படுத்தல்: உங்கள் வணிகத்தை வெற்றிகரமாக முன்னேற்றுவதற்கு திறமையான சந்தைப்படுத்தல் திட்டம் தேவை.

### தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சி:

தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் பதிவு செய்வது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குகின்றது. சொந்த முதலாளியாக இருப்பதன் மூலம், உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், முடிவுகளை எடுப்பதற்கான சுதந்திரத்தை அனுபவிக்கவும் முடியும். கூடுதலாக, வணிகத்தை வளர்ப்பதன் மூலம், பணியாளர்களை நியமிக்கவும், ஒரு குழுவை வழிநடத்தவும் மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கும்.

### தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்வதன் நன்மைகள்:

» நம்பகத்தன்மை மற்றும் நற்பெயர்: ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்வது உங்கள் வணிகத்திற்கு நம்பகத்தன்மை மற்றும் நற்பெயரை வழங்குகின்றது. வர்த்தகத்தில் நம்பகத்தன்மையையும் தொழில்முறையையும் அதிகரிக்கின்றது.

» வரையறுக்கப்பட்ட பொறுப்பு: உறுப்பினர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன. நிறுவனத்தின் கடன் அல்லது வழக்குகளுக்கு அவர்களின் சொந்த வீடு, கார் போன்றவற்றை இழக்க நேரிடும் சூழ்நிலை இருக்காது.

» முதலீட்டு மற்றும் நிதி பெறுதல்: வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களுக்கு எளிதாக கடன்களை வழங்குகின்றன. மேலும், முதலீட்டாளர்கள் நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்ய அதிக விருப்பம் காட்டுவார்கள்.

» விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள்: தனியார் நிறுவனம் என்ற அமைப்பு விரிவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கானும் அதிக வாய்ப்புகளை வழங்குகின்றது. பங்குகளை வழங்குவதன் மூலம் மூலதனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றது. புதிய கிளைகளை திறப்பது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

» சுதந்திரமான நிர்வாகம்: உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகம் ஆகியன தனித்தனியாக இருக்கும். நிறுவனத்தின் இயக்குநர்கள் நிர்வாகத்தை கவனித்துக்கொள்வார்கள்.

» வரி நன்மைகள் / விலக்குகள்: நிறுவன வரி விகிதங்கள் தனிப்பட்ட வரி விகிதங்களை விட குறைவாக இருக்கலாம்.

» தொடர்ச்சி: உரிமையாளர்கள் மாறினாலும் கூட நிறுவனம் தொடர்ந்து செயல்படும்.

### பதிவு செய்வதற்கான செலவு:

தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை பதிவு செய்வது பொதுவாக பெருந்தொகையான பணம் தேவைப்படாத ஒரு மலிவான செயல்முறையாகும். பதிவு கட்டணம், அங்கீகரிக்கப்பட்ட முகவரின் கட்டணம் மற்றும் அலோசனை கட்டணம் உள்ளிட்ட மொத்த செலவு மிகவும் குறைவாக இருக்கும்.

### பதிவு செய்வதற்கான தேவைகள்:

» குறைந்தது ஒரு பங்குதாரர் இருக்க வேண்டும் (18 வயதுக்கு மேற்பட்ட இலங்கை குடிமகன்).

» நிறுவனத்திற்கு ஒரு தனித்துவமான பெயர் தேவை.

» பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி தேவை.

» நிறுவனத்தின் அடிப்படை விதிமுறைகள் (Articles of Association) தயாரிக்கப்பட வேண்டும்.





» பங்குதாரர்களின் பங்கு மூலதனம் குறிப்பிடப்பட வேண்டும்.

## பதிவு செய்யும் நடைமுறை:

1. நிறுவன பெயரை சரிபார்க்கவும்: பதிவாளர் திணைக்களத்தின் இணையதளத்தில் கிடைக்கும் பெயர் சரிபார்ப்பு சேவையை பயன்படுத்தி தேர்ந்தெடுத்த பெயர் கிடைக்கிறதா என்பதை உறுதிப்படுத்தவும்.

2. படிவங்களை பூர்த்தி செய்தல்: தேவையான படிவங்களை பதிவாளர் திணைக்களத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும்.

3. தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தல்: பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவரின் கடிதம், பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள் மற்றும் பிற தேவையான ஆவணங்களை பதிவாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4. கட்டணம் செலுத்துங்கள்: பதிவு கட்டணம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவரின் கட்டணம் செலுத்தவும்.

5. சான்றிதழ் பெறவும்:

பதிவு செயல்முறை வெற்றிகரமாக முடிந்ததும், பதிவாளர் திணைக்களம் நிறுவன சான்றிதழை (Certificate of Incorporation) வழங்கும். இந்த சான்றிதழ் உங்கள் நிறுவனம் சட்டப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆவணமாகும்.

## தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை பராமரித்தல்:

» வருடாந்திர பொதுக் கூட்டங்கள் நடத்துதல் மற்றும் நிமிட பதிவுகளை பராமரித்தல்.

» நிதி கணக்குகளை பராமரித்தல் மற்றும் வருடாந்திர கணக்கு தாக்கல் செய்தல்.

» வருமான வரி மற்றும் பிற வரிகளை செலுத்துதல்.

» நிறுவன சட்டத்தின் தேவைகளுக்கு இணங்குதல்.

## நிறுவனத்தை பராமரிப்பதற்கான சில முக்கிய கடமைகள்:

» வருடாந்திர பொதுக் கூட்டங்கள் (AGMs):

» ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு AGM நடத்தப்பட வேண்டும்.

## AGM-ல் பின்வரும் விஷயங்கள் விவாதிக்கப்பட வேண்டும்:

» நிறுவனத்தின் நிதி நிலைமை

» இயக்குநர்களின் அறிக்கை

» வருடாந்திர கணக்குகள்

» வருகின்ற ஆண்டிற்கான திட்டங்கள்

» AGM-ன் நிமிடங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

## நிதி கணக்குகள்:

» நிறுவனம் சரியான நிதி கணக்குகளை பராமரிக்க வேண்டும்.

» கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

» வருடாந்திர கணக்குகள் பதிவாளர் திணைக் களத்திற்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

## வரி செலுத்துதல்:

» நிறுவனம் வருமான வரி மற்றும் பிற வரிகளை செலுத்த வேண்டும்.

» வரி செலுத்துவதற்கான காலக்கெடுவுகளை பின்பற்ற வேண்டும்.

## சட்டத்திற்கு இணங்குதல்:

» நிறுவன சட்டம் மற்றும் பிற சட்டங்களுக்கு நிறுவனம் இணங்க வேண்டும்.

» தேவையான அறிவிப்புகள் மற்றும் பதிவுகளை சரியான நேரத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

## பிற கடமைகள்:

» நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் நல்லுறவை பராமரிக்க வேண்டும்.

» நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் நிதி ஆதாரங்களை கவனமாக நிர்வகிக்க வேண்டும்.

» நிறுவனத்தின் நற்பெயரை பாதுகாக்க வேண்டும்.

## பராமரிப்புக்கான உதவி:

» நிறுவனத்தை பராமரிப்பதற்கான சட்ட மற்றும் நிதி விஷயங்களில் நிபுணர்களின் உதவியை பெறுவது நல்லது. நிறுவன செயலாளர், கணக்காளர் மற்றும் வழக்கறிஞர் போன்ற நிபுணர்கள் உங்களுக்கு உதவ முடியும்.

» இலங்கையில் வணிகத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கும், வெளிநாட்டு சந்தைகளுக்குள் நுழைவதற்கும் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்வது சிறந்த வழிமுறையாகும். இது வணிகத்திற்கு நம்பகத்தன்மை மற்றும் நற்பெயரை வழங்குவதுடன், வரையறுக்கப்பட்ட பொறுப்பு, கூடுதல் நிதி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மற்றும் விரிவாக்கத்திற்கான சந்தர்ப்பங்களையும் வழங்குகின்றது. இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் தங்கள் வளர்ச்சி இலக்குகளை அடைய தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்து கொள்வதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

+94 777 802 900 |
swaminathan@agsarma.com |
www.agsarma.com

# மரவள்ளிப் பயிர்ச்செய்கை

**மரவள்ளி கிழங்கு ஒரு காலத்தில் பலரின் பசி தீர்க்கும் நிவாரணியாக இருந்ததோடு அல்லாமல், இப்பொழுது ஒரு பணம் செய்யும் பயிராகவும் மாறிவிட்டிருக்கிறது. மரவள்ளியை இலகுவாக பயிரிடுவதோடு மிக அதிகமான இலாபத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.**



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



இலங்கையில்தீவுமுழுவதும்மரவள்ளி வளர்க்கப்படுகிறது. மரவள்ளி கிழங்கின் உற்பத்தி முறைகள் கொல்லைப்புற பயிர் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இலங்கையில் ஈரவலயத்தில் அதிகளவில் மரவள்ளி பயிர் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. (கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மாவட்டம்) இடை வலயத்தில் தென்னை மற்றும் அன்னாசியு டன் (குருநாகல் மாவட்டம்) உலர் வலயத்தில் புத்தளம், அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை போன்ற மாவட்டங்களி லும். மற்றும் வட கிழக்கிலும் மானாவாரி முறையில் பெரிய அளவில் பயிர் செய்யப் படுகின்றது. மகா பருவத்தில் ( செப்டம்பர் – மார்ச்) உச்ச அளவில் உற்பத்தி செய்யப் படுகின்றது .

இலங்கையில் சிபாரிசுசெய்யப்பட்ட வர்க்கங்கள் பின்வரும் வர்க்கங்கள் பயிர்ச்செய்கைக்குச் சிபாரிசு செய்யப்பட் டுள்ளன. இவை கூடிய காபோவைதரேற்று மற்றும் உலர் பொருள், குறைந்தளவு பிறசிக்கமிலம் கொண்டன. 1. சுரனிமல (BW 1) இது களுத்துறை மாவட்டத்தில் இயற்கையான தெரிவுக்குட்பட்ட ஒரு வர்க்கமாகும். வெள்ளி சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளைவிடும். இளம் இலைகள் சிவப்புக் கபில நிறமானதோடு பச்சைநிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் கடும் செம்மஞ்சள் – சிவப்பு காம்பினைக் கொண்டது. கிழங்குகள் கபில நிறமான வெளித் தோலையும் வெண்ணிறமான கிழங்குகளையும் கொண்ட நீண்டனவாகும்.

சராசரிவிளைச்சல்ஹெக்டயரொன்றிற்கு 35-50 தொன்களாகும். 2. ஸ்வர்ணா (BW 2) வெள்ளி சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளை விடாது. இளம் இலைகள் சிவப்பு கபில நிறமானதோடு பச்சை நிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் காணப்படும். கடும்சிவப்புநிறக்காம்பினைக்கொண்டவை. மத்திய அளவான கிழங்குகளின் வெளித் தோல் கபில நிறமானவை. கிழங்குகள் மஞ்சள் நிறமானவை. சராசரி விளைச்சல் ஹெக்ரெயர் ஒன்றிற்கு 35 – 40 தொன்க ளாகும். 3. ஷானி (BW14) இது கொழும்பு மாவட்டத்திலுள்ள விவசாயிக ளினால் தெரிவு செய்யப்பட்டதொரு வர்க்கமாகும்.

கடும் கபில நிறமான தண்டு காலம் செல்ல கிளைவிடும். இலைகளும் காம்பும் பச்சை நிறமானவை. பெரியளவான கிழங்குகளின் வெளித்தோல் கபில நிறமானவை. கிழங்குகள் வெண்ணி றமானவை சராசரி விளைச்சல் ஹெக்டய ரொன்றிற்கு 35-40 தொன்களாகும். 4. கிரிகாவடி குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக் கூடியது. அதிக உலர் பொருளையும் காபோவைதரேற்றையும் கொண்டுள்ளது. குறைவான நச்சுப் பதார்த்தத்தையும், வேறு பல விசேட இயல்புகளையும் கொண்ட இனமாகும். ஆறு மாதத்தில் அறுவடை செய்யும் போது 20 தொன் விளைச்சலையும், 11 மாதத்தில் அறுவடை செய்யும் போது 60 தொன் விளைச்சலையும் ஒரு ஹெக்ரயரில் தரக்கூடியது. பருவகாலங்களில் ஈரவலயத்திலும், நீர்ப்பாசனத்தின் கீழ் உலர் வலயத்திலும் செய்கை பண்ண முடியும்.

இவ்வர்க்கம் கன்னொறுவ மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தாவரவியல் பிரிவினரால் விருத்தி செய்யப்பட்டது. விரைவில் கிளைவிடக் கூடியது. 1.5 மீற்றர் உயரம் வரை வளரும். ஒரு தாவரத்தில் இருந்து 8 – 11 கிழங்குகள் வரை உற்பத்தியாகும். கிழங்கின் வெளித் தோலும் உட் தோலும் வெள்ளை நிறமாகக் காணப்படும். 5. MU 51 (பேராதனைத் தெரிவு) இது உள்ளூர் பேதம் குறைவான கிளைவிடும் தன்மை கலப்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது. வெள்ளைச் சதையும் ஊதா நிற உட்தோலும் கபில நிற வெளித் தோலும் கொண்டதால் தண்டிலிருந்து அகற்றுதல் இலகுவாகும். இவ் வர்க்கம் ஏற்றுமதிக்கு ஏற்றது. இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும். 6. சி .ஏ. ஆர். ஐ. – 555 உள்ளூரில் விருத்தி செய்யப்பட்டது. குறைந்த கிளைவிடும் தன்மை கொண்டது. கலப்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது. இதன் சதை. பால் போன்ற வெள்ளை நிறமானது.

உட்தோல் மென் ஊதா நிறமானது. வெளித்தோல் கபில நிறமானது. சமைக்கும் தரம் சிறந்தது. இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்க ளாகும். மரவள்ளி இனங்களில் 4 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 6 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 9 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 12 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது என பல இனங்கள் உள்ளது. இதில் 6 மாதத்திற்கு மேற்பட்ட ரகங்களே சிறப்பானதாக இருக்கும்.

**மரவள்ளி - தாவரத்தின் வளரியல்பு**

1. தண்டுமூலம் இனப்பெருக்கம் செய்யப் படுகின்றது. தண்டுபகுதியை நடவுசெய்வதன் மூலம் புதிய தாவரமாக வளர்கிறது. தண்டு முளைக்கும் தன்மையானது இதன்



சேமிப்புணவில் தங்கியுள்ளது. முளைகள் தண்டிலிருந்து வளரும்போது அதற்குத் தேவையான உணவு 3 – 4 கிழமைகளுக்கு மட்டும் தண்டிலிருந்து வழங்கப்படுகிறது. பின்பு இலையினூடாக அதன் ஒளித் தொகுப்புச் செயற்பாட்டின் மூலம் கிடைக் கின்றது.

2. தண்டு நடப்பட்டு 3 – 4 நாட்களில் வேர் உண்டாகின்றது. இங்கு இருவிதமான வேர்கள் உண்டாகின்றன. பக்க வேர், ஆணிவேர் ஆகும். ஆணிவேரிலே உணவு சேமிப்பதன் மூலம் கிழங்காக மாறுகிறது.

3. தண்டுகளில் அரும்புகள் நிலத்திற்கு மேலான கணுக்களிலிருந்து உருவாகும். தாவரம் நடப்பட்டு 25ம் நாள் தொடக்கம் வேரில் உணவு சேமிப்பு நடைபெறத் தொடங்கும். இது 60ம் நாள் மட்டும் விரைவாக நடைபெற்று பின்னர் குறைவடையத் தொடங்கும். 4.உயர்ந்த நீண்ட தண்டு, நீண்ட இலைக்காம்பு என்பன காணப்படும். தண்டின் நிறம் பச்சை தொடக்கம் சிவப்பு கலந்த அல்லது கடும் சிவப்பு வரை மாறுபட்டுக் காணப்படும். 5. இலைகள் யாவும் 5 – 7 வரையான பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதுடன் இவை வர்க்கத்திற்கேற்ப வேறுபட்டுக் காணப்படும்.

மரவள்ளி பயிர்செய்கைக்கு ஏற்ற காலநிலை மற்றும் மண்: மரவள்ளி ஒரு வெப்பமண்டல வேர் பயிர், உற்பத்தி செய்ய குறைந்தது 8 மாதம் வெப்பமான வானிலை தேவைப்படுகிறது. மரவள்ளியை நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரியிலும் நடுகை செய்யலாம். மலைப் பிரதேசங்களில் மானாவாரி முறையில் செய்யப்படுகிறது. நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் இந்த பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்படலாம்,

காலநிலைத் தேவைகள் கடல் மட்டத்திலிருந்து 1200 மீற்றர் உயரம் வரையான பிரதேசத்தில் இதனைப் பயிரிடலாம். இப்பயிர் வரட்சியையும் தாங்கக்கூடியது. இது அயனமண்டல தாழ்நாட்டிற்கும் ஏற்றது. சூடான ஈரக் காலநிலையும் 25 – 29 பாகை செண்ரிகிறேட் வெப்பநிலையும் இப்பயிரின் வளர்ச்சிக்கு ஏற்றது. குளிர்ந்த அல்லது வறண்ட வானிலை போன்ற பாதகமான சூழ்நிலையில் பயிர் உற்பத்தி செய்ய 18 அல்லது அதற்கு மேற்பட்ட மாதங்கள் ஆகும். மரவள்ளி வெள்ளம் உறைபனி நிலைமைகளை பொறுத்துக்கொள்ளாது.

மண் மரவள்ளிப் பயிர்செய்கைக்கு இருவாட்டி மண் சிறந்தது. எனினும் செம்மண், கரிசல் மண்களிலும் இதனைப் பயிரிடலாம். மண்ணில் கார அமிலத் தன்மை pH 4.5 முதல் 8.0 வரை சூரிய வெப்பத்தில் அதிக விளைச்சலை தரும். மற்றும் களிமண், வண்டல் மண் ஏற்றவையல்ல. நிலம் தயாரித்தல் மானாவாரி சூழ்நிலையில்; பருவமழை தொடங்குவதற்கு முன் பயிரிட சிறந்த நேரம். பாரம்பரிய முறையில் நிலத்தைப் பண்படுத்தாது மண்ணைக் குவித்து துண்டங்கள் கிடையாகவோ அல்லது சாய்வாகவோ நடலாம்.

பொதுவாக மண்குவியல் 30-60 செ.மீ உயரத்திற்கு குவிக்கப்படும். மரவள்ளிச் செய்கைக்கு மண் 25-50 செ.மீ ஆழம் வரை ஒரு வார இடைவெளியில் 3 முறை நன்கு உழ வேண்டும். பிறகு ஒரு வாரம் கழித்து 10 டன் தொழுவுரத்தைக் கொட்டிப் பரப்பி மண்ணுடன் கலந்து விட வேண்டும். இதன்பின் தண்டுத்துண்டங்கள் மேடையில், வரம்புகளில் நடப்பட வேண்டும்.

மரவள்ளி நாற்றுகள் நோய் மற்றும் பூச்சி இல்லாத 8 முதல் 9 மாத முதிர்ந்த 2 முதல் 3 செ.மீ தடிமனான தண்டுகளில் மொத்த நீளத்தில் மேலே இருந்து 1/3 ஐ தவிர்த்து கீழ் பக்கம் அதாவது நடுப் பகுதியிலிருந்து, 20 – 25 செ.மீ நீளமான 4 – 6 தண்டுத் துண்டங்கள் வெட்டி எடுக்கலாம். நடும் போது தண்டின் 2-3 அரும்புகள் நிலத்திற்கு மேலே விட்டு துண்டங்களை செங்குத்தாக மண்ணில் புதைக்கலாம். நடும்போது அரும்புகள் மேல் நோக்கி இருத்தல் அவசியம். எனினும் சில இடங்களில் தண்டு கிடையாகவோ அல்லது ஒரு சரிவாக ஒரு கோணத்திலோ நடப்படுகிறது. நடவுத்தடி புதிதாக வெட்டப்பட்ட தாகும், நன்கு மொத்தமானதாகவும், காயமற்றதாகவும் இருக்க வேண்டும். தண்டின் நுனிப் பகுதி நடுவதற்கு உகந்ததல்ல. முதிர்ந்த துண்டங்களே அதிகளவில் வேர் விடும் தன்மை கொண்டனவாகும். துண்டங்களைப் பெற்றுக் கொண்ட நாளிலோ அல்லது அடுத்த நாளோ நட வேண்டும்.

20 லிட்டர் பஞ்சகவ்யா கலந்து, அக்கலவையில் விதைக்குச்சியின் முனையை மூழ்க வைத்து நிழலில் 15 நிமிடங்கள் வரை உலர்த்தி நட வேண்டும். நடவு முறை ஹெக்டயர் ஒன்றிற்கு 12,300 துண்டங்கள் தேவைப்படும் (90 X 90 செ.மீ இடைவெளி,) பொதுவாக மழையுடன் நடுவது சிறந்தது. உலர் வலயத்தில் பெருமழையுடன் அல்லது நீர்ப்பாசனத்துடன் நடலாம். ஈரவலயத்தில் வருடம் முழுவதும் நடலாம்.

நடுகை இடைவெளி 1. தனிப்பயிராக அல்லது ஒரு வரிசை மட்டும் இடைப்பயிர்ச் செய்கை பண்ணுவதாயின் கூடிய கிளை விடும் தன்மையுள்ள நடுகைத் துண்டங்களை 120 X 120 செ.மீ. இடைவெளியிலும், கிளைவிடும் தன்மை குறைந்த துண்டங் களாயின் 90 மு 90 செ.மீ. இடைவெளியிலும் நடலாம். ஏற்றுமதி பயிர்ச்செய்கைக்கு 60 மு 90 செ.மீ. இடைவெளியிலும் நடலாம். 2. மரவள்ளி நடும் பொழுது சிறுபோக பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் 90 X 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும். மானாவரிப் பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் செடிக்குச் செடி 60 X 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும்.

நீர் மேலாண்மை தொடர்ந்து மண்ணின் ஈரப்பதத்துக்கேற்ப தண்ணீர் பாய்ச்சினால் போதும். மரவள்ளி நட்ட மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். பின்னர் வளர ஆரம்பித்ததும் ஒரு மாதம் வரை 3 நாள்களுக்கு ஒருமுறையும், பின் 2–ஆம் மாதம் முதல் 7 மாதங்கள் வரை 7 முதல் 10 நாள்களுக்கு ஒரு முறையும், நீர் பாய்ச்ச வேண்டும். அதன்பின் அறுவடை வரை 20 நாள்கள் இடைவெளியிலும் நீர் பாய்ச்ச வேண்டும். களைக்கட்டுப்பாடு – தாவரம் தரையை மூடி வளரும் வரை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். ‘ கையினால் களைக்கட்டுப்படுத்தல் இலாபகரமானது. – பயிர் நட்டு முதல் 3 – 4 மாதங்கள்

பயிரிடையே களைகள் இல்லாதிருக்க வேண்டும்.

'பொதுவாக 1- 3 தடவை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் 1. விதைத்த 7-ஆம் நாளுக்கு மேல் முளைப்பு தெரியும். 2. நட்டு 30-ஆம் நாளில் களை எடுத்து, ஒவ்வொரு செடியின் தூரிலும் ஒரு கைப்பிடி அளவு மண்புழு உரம் வைத்து மண் அணைக்க வேண்டும். அந்தச் சமயத்தில் விதைக் குச்சிகள் முளைக்காத இடங்களில் புதிய குச்சிகளை ஊன்ற வேண்டும். 3. 45-ஆம் நாள், செடிகளில் நடுக்கிளையை மட்டும் விட்டுவிட்டு மற்ற கிளைகளை அகற்ற வேண்டும். தொடர்ந்து பக்க கிளை களை அகற்றிக்கொண்டே வர வேண்டும். பக்க கிளைகள் வளர்ந்தால் கிழங்கு பெருக்காது. 4. 60-ஆம் நாளில் களை எடுத்து.. 200 லிட்டர் ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும். தொடர்ந்து, 20 நாள்களுக்கு ஒருமுறை ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும். 5. நட்டு 90-ஆம் நாளில் களை எடுத்து ஒவ்வொரு செடியின் தூரிலும் இரண்டு கைப்பிடி அளவு மண்புழு உரம் வைக்க வேண்டும். 5. 120-ஆம் நாளில் களை எடுத்து... 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா என்ற விகிதத்தில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் நிலம் முழுவதும் தெளிக்க வேண்டும். இறுதியாக களைகட்டலுடன்மண்அணைக்கவேண்டும். இடைப்பயிர் தென்னை மரங்களிற்கிடையே ஊடு பயிராகச் செய்கை பண்ணுவதாயின் மரங்களிலிருந்து 2 மீற்றர் தூரத்தில் நடல்வேண்டும். கலப்புப் பயிர்செய்கை முறையாக இருந்தால் ஊடுபயிராக சிறிய வெங்காயம், உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி மற்றும் கொத்தமல்லி போன்ற குறுகிய காலப் பயிர்களை நடலாம். நடவு செய்த 60 தொடக்கம் 90 நாள்களில் ஊடுபயிரை அறுவடை செய்து, மேலுரம் இட்டு பின்னர் மண் அணைத்து நீர் பாய்ச்ச வேண்டும்.

சேதனப்பசளைகள்சேதனப்பசளையாக கோழியெரு அல்லது மாட்டெருவை ஒரு ஹெக்டயரிற்கு 10தொன் என்ற அளவில் பயன்படுத்தப்படுகின்றதுஇதனைநடுவதற்கு 3-5 நாட்களுக்கு முன்னர் பிரயோகிக்க வேண்டும்.

**பூச்சிகள் மற்றும் நோய்கள்: -**

வெள்ளை ஈ: இவை இலைகளில் சாறை உறிஞ்சி உற்பத்தியை பாதிக்கும். மஞ்சள் தேமல் நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி வெள்ளை ஈ மூலமாகப் பரவும். இதைக் கட்டுப்படுத்த வேப்பம் எண்ணை 1 லிட்டர் நீருக்கு 30 மில்லி அளவிலும், ஒட்டும்திரவம் 1மி.லி அளவிலும் கலந்து தெளிக்கலாம்.

மாவுப்பூச்சி: மரவள்ளியின் இளம் தளிர், தண்டு மற்றும் இலையின் அடிப் பரப்பிலிருந்து காற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். நுனிக் குருத்துகள் உருமாறி வளர்ச்சி குன்றி காணப்படும். இடைக் கணுக்களின்நீளம்குறைந்து தண்டுகள் சிதைவ டையும். இதைக்கட்டுப்படுத்தஅசிரோ பாகஸ் பப்பாயே என்னும் நன்மை செய்யும் ஒட்டுண் ணியை ஏக்கருக்கு 100 எண்ணிக்கையில் விடலாம். மாலத்தியான் பூச்சிக் கொல்லி 1 லிட்டர் நீருக்கு 1 மி.லி அளவில் கலந்து தெளிக்கலாம்.



இலைப்புள்ளி நோய்: பூஞ்சைமூலம்ஏற்படக்கூடிய இந்நோய் பாதித்த இலை களில்பழுப்புநிறப்புள்ளிகள் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த மாங்கோசெப் பூஞ்சாணக் கொல்லியை 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் கலந்து 15 நாள் இடை வெளியில் இருமுறை தெளிக்கலாம்.

கிழங்கு அழுகல்: நீர் தேங்கும் பகுதிகளில் கிழங்குகள் அழுகிவிடும். அதனால் முறையான வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். டிரைக்கோடெர்மாஆஸ்பரெல்லம் உயிரிப் பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் நடவு செய்த உடனேயும் 3, 6ஆவது மாதங்களில் நிலத்தில் ஈரப்பதம் இருக்கும்போது எருவுடன் கலந்து தூவ வேண்டும். அறுவடை பயிரின் முதிர்ச்சிக் காலம் 8-10 மாதங்களாகும். எனினும் சில சமயம் விரும்பிய நேரம் அறுவடை செய்யலாம். மரவள்ளிக் கிழங்கை 9 முதல் 10 மாதங்களுக்குள் அறுவடை செய்துவிட வேண்டும். இதற்குமேல் தாமதமானால் கிழங்குகள் முற்றி வேர்கள் தடித்துவிடும். அதை சிப்ஸ் செய்யவோ, சவ்வரிசி செய்வ தற்கோ இயலாது.

**அறுவடைக்கான**

10-ஆம் மாதத்துக்கு மேல் இலைகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகி உதிர ஆரம்பிக்கும். நிலத்தில் வெடிப்பு கள் காணப்படும். அறுவடை செய்வதற்கு நான்கு அல்லது ஐந்து நாள்களுக்கு முன் நீர் பாய்ச்ச வேண்டும். தாவரத்தை கவனமாகக் கிழங்கு முறியாது பிடுங்குதல் அவசியம். மண் கடினமாக இருப்பின் கிழங்குகள் சேதமடைவதைத் தவிர்ப்பதற்கு பிடுங்க முன் தாவரங்களைச் சுற்றியுள்ள மண் ஓரளவு அகற்றப்பட வேண்டும். இங்கு பயிர் ஒரே நேரத்தில் அறுவடை செய்ய வேண்டிய அவசியமில்லை. பொதுவாக அறுவடை செய்த கிழங்குகளை மீண்டும் மண்ணுள் புதைத்து 10 நாட்கள் வரை சேமிக்கலாம்.

அடுத்த விதைப்புக்கு செடிகளிலிருந்தே விதைக் குச்சிகளை எடுத்து வைத்துக் கொள்ளலாம். உற்பத்தி & விளைச்சல் காலநிலைநிலைமைகள்மற்றும்தேர்ந்தெடுக் கப்பட்ட பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்தது. வழக்கமாக, கலப்பின / அதிக விளைச்சல் தரும் வகைகள் ஒரு ஹெக்டேருக்கு 30 முதல் 40 டன் வரை உற்பத்தி செய்கின்றன, குறுகிய காலத்திற்குள் ஹெட்டயருக்கு 25 முதல் 30 டன் உற்பத்தி செய்யலாம். கிழங்கின் சராசரி நிறை, ஒரு தாவரத்திலுள்ள கிழங்குகளின் எண்ணிக்கை, ஒரு ஹெக்டயரிலுள்ள தாவரங்களின் எண் ணிக்கை என்பவற்றைப் பொறுத்து விளைச்சல் வேறுபடலாம்.



# சில்லறை வணிகத்தில் அமேசன் ஏற்படுத்திய புரட்சிகர மாற்றம்

**முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், மதுரையில் உள்ள வணிகர், தன் கடை அமைந்திருக்கும் எல்லைக்கு உட்பட்டே தன் பொருட்களை விற்க முடியும். ஆனால், இன்று அவரால் ஈ-கொமர்ஸ் தளங்கள் மூலம் நாட்டின் எந்த மூலையில் இருப்பவருக்கும் தன் பொருளை விற்க முடியும். அதேபோல், நுகர்வோரும் தங்கள் வீட்டில் இருந்தபடி, எந்த மூலையிலிருந்தும் தங்களுக்குத் தேவையான பொருட்களை எளிதில் வாங்க முடியும்.**

**முகம்மது ரியாஸ்**




ஜூலை 5ஆம் தேதியோடு 30 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது அமேசான். புத்தக விற்பனை தளமாக தொடங்கப்பட்ட நிறுவனம், கடந்த 30 ஆண்டுகளில் சில்லறை வணிகத்தில் பெரும் புரட்சி நிகழ்த்தியதோடு, உலகின் பொருளாதாரப் போக்கிலும் கலாச்சாரப் போக்கிலும் தாக்கம் செலுத்தும் சாம்ராஜ்ஜியமாக உருவெடுத்தது எப்படி?

ஜெஃப் பிசோஸுக்கு அப்போது வயது 30. பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் மின்னணு மற்றும் கணினி அறிவியலில் பட்டம் பெற்றுவிட்டு, நியூயார்க்கில் அமைந்திருந்த டி.ஈ.ஷா முதலீட்டு நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார். இணையம் சார்ந்த முதலீட்டு வாய்ப்புகளை அலசி ஆராய்வதுதான் அந்நிறுவனத்தில் அவருக்கான பொறுப்பு.

இணையம் பொதுப் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கிய 1990-களின் தொடக்க காலகட்டம் அது. ஆண்டுக்கு 2,500 சதவீத வளர்ச்சி அடைந்துகொண்டிருந்த இணையம், உலகையே தலைகீழாகப் புரட்டிப்போடப்போகிறது என்பதை உணர்ந்த ஜெஃப் பிசோஸ் அது சார்ந்து ஸ்டார்ட்அப் ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்கிறார்.

ஜெஃப் பிசோஸ் தான் வேலை பார்த்துக் கொண்டிருந்த நிறுவனத்தில் உச்சப் பொறுப்பில் இருந்தார். இணையத்தின் சாத்தியத்தை உணர்ந்த அவர், நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்கிறார். சரி, இணையத்தைப் பயன்படுத்தி என்ன செய்வது?

உலகம் முழுவதும் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. கடைகள் மூலமாகவே அவை விற்பனை செய்யப்படுகின்றன. கடைகள் எல்லா இடங்களிலும் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும், மக்கள் விரும்பும் அனைத்துப் புத்தகங்களும் ஒரே இடத்தில் கிடைப்பதில்லை. உலகில் உள்ள அனைத்துப் புத்தகங்களும் ஒரே இடத்திலும் கிடைக்கும்படி ஒரு தளத்தை நாம் உருவாக்கலாம் என்று திட்டமிட்ட பிசோஸ், 1994-ம் ஆண்டு ஜூலை மாதம், தன் வீட்டு காரேஜில் நண்பர்களுடன் இணைந்து நிறுவனத்தைத் தொடங்குகிறார்.

புத்தக விநியோக நிறுவனங்களை ஒன்றிணைக்க வேண்டும். மக்கள் இணையத்தில் புத்தகத்தைத் தேடுவதும் அதை ஆர்டர் செய்வதும் எளிதாக இருக்க வேண்டும். விநியோகம் சரியாக நடக்க வேண்டும். இதற்கேற்ற வகையில் மென்பொருளை உருவாக்கும் பணியில் இறங்கியது அக்குழு. சரியாக ஓராண்டு கழித்து ‘பூமியின் மிகப் பெரிய புத்தக நிலையம்’ என்ற வாசகத்துடன் அறிமுகமானது அமேசான். இன்று மக்கள் பயன்பாட்டுக்கான அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்யும் தளமாக அமேசான் உள்ளது.

ஆண்டுக்கு 600 பில்லியன் டொலர் (ரூ.200 லட்சம் கோடி) மதிப்பிலான பொருட்கள் அமேசான் மூலம் விற்பனையாகிறது. கிளவுட் கம்ப்யூட்டிங், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், தானியங்கி கார், உணவு, விண்வெளி ஆராய்ச்சி என பலதளங்களில் கால் பதித்து செயல்படும் அமேசான், 2 டிரில்லியன் டாலர் சந்தை மதிப்பைக் கொண்டு உலகின் மிக பெரிய நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது. ஜெஃப் பிசோஸ் 216 பில்லியன் டாலர் (ரூ.70 லட்சம் கோடி) சொத்து மதிப்புடன் உலக பில்லியனர்கள் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். முப்பதே ஆண்டுகளில் இந்த வளர்ச்சி எப்படி சாத்தியமானது?

இன்றைக்கு ஈ-காமர்ஸ் என்பது நம்முடைய அன்றாடத்தில் ஒன்றாக உள்ளது. ஆனால், 30 ஆண்டுகளுக்கு முன்னால், ஈ-காமர்ஸ் குறித்தும் அதன் சாத்தியம் குறித்தும் யாரும் பெரிதாக கற்பனை செய்ததில்லை. அமேசானுக்கு முன்பு சில ஈ-காமர்ஸ் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவை வெற்றிகரமாக செயல்பட்டதில்லை.

இந்தச் சூழலில், வழமையான கடைகள் மூலம் நிகழும் வணிகத்தை இணையம் மூலம் மேற்கொள்வது குறித்து சிந்தித்தார்




ஜெஃப் பிசோஸ். புதிதாக சாத்தியங்களை உருவாக்குவதில் தீவிர முனைப்புடன் செயல்படுபவர் பிசோஸ். அதன் நீட்சியாகவே, புத்தக விற்பனையோடு நின்றுவிடாமல், மக்கள் தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்கும் வகையில் அமேசானை ஒரு சந்தைத் தளமாக அவர் மாற்றினார்.

புதிய சாத்தியங்களை கண்டறிவதன் மீதுள்ள பிசோஸின் தீவிர வேட்கைக்கு மிகச் சிறந்த உதாரணம் ஏடபிள்யூஎஸ் என்று அழைக்கப்படும் அமேசான் வெப் சர்வீசஸ். அமேசான் என்றால், அதன் ஈ-கொமர்ஸ் தளம்தான் பரவலாக அறியப்படுகிறது.

ஆனால், அமேசானின் லாபத்தில் 50 சதவீதம் அதன் கிளவுட் கம்ப்யூட்டிங் (அமேசான் வெப் சர்வீஸ்) மூலமே வருகிறது. 2000-த்தின் தொடக்கத்தில் அமேசான் தளத்தை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. இதனால், தரவுகளை சேமித்துப் பராமரிப்பதில் பெரும் சிக்கல் உருவானது.

பெரிய அளவிலான தரவுகளோடு புழங்க ஹார்ட்வேர், சர்வர், டேட்டா சென்டர் என பெரும் கட்டமைப்பு அவசியம். இந்தக் கட்டமைப்பை உருவாக்குவது செலவு மிகுந்தது மட்டுமல்ல, பயன்பாட்டுக்கு ஏதுவானதும் இல்லை. இந்நிலையில், இதற்கு மாற்றான வழிமுறையை உருவாக்க பிசோஸ் திட்டமிட்டார்.

தீவிர ஆராய்ச்சிக்கு பிறகு, அமேசான் நிறுவனம் பெரும் தரவுகளை கையாளுவதற்கென்று புதிய கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. அதுதான் அமேசானின் கிளவுட் கம்ப்யூட்டிங். கிளவுட் கம்ப்யூட்டிங்கின் சிறப்பம்சம் என்னவென்றால், அதன் மூலம் பெரும் தரவுகளை எளிதாகக் கையாளலாம். உலகில் எந்த மூலையிலிருந்தும் அத்தரவுகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

ஐடி துறையில் கிளவுட் கம்ப்யூட்டிங்கின் தேவையை உணர்ந்த அவர், அமேசானின் பயன்பாட்டுக்கு மட்டுமல்லாது, பிற நிறுவனங்களின் பயன்பாட்டுக்கும் அதை விற்க முடிவெடுத்தார். 2002-ம் ஆண்டு அமேசான் வெப் சர்வீஸ் என்ற பெயரில் அது தனி நிறுவனமாக உருவெடுத்தது.

ஐடி நிறுவனங்களுக்கு அமேசானின் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவை வரப்பிரசாதமாக அமைந்தது. எப்படி அமேசானின் ஈ-கொமர்ஸ் தளம் சில்லறை வணிகத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றதோ, அதுபோலவே அதன் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவை, ஐடி துறையின் தரவுப் பயன்பாட்டை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றது.

தற்போது ஐடி துறையில் முக்கியமானதாக மாறியிருக்கும் கிளவுட் கம்ப்யூட்டிங்கின் உலகளாவிய சந்தையில், அமேசான் பங்கு மட்டும் 30 சதவீதம் ஆகும். அதேபோல், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை மிக ஆரம்பத்திலேயே அமேசான் தளத்தில் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துவிட்டார் பிசோஸ். இவ்வாறு புதிய கண்டுபிடிப்புகளின் வழியாகவும் தொழில்நுட்ப அறிமுகம் வழியாகவும் அமேசானை முன்னுதாரணமற்ற வளர்ச்சிப் பாதையில் கொண்டுசென்ற பிசோஸ் தற்போது, சாட் ஜிபிடியை உருவாக்கிய ஓப்பன் ஏஐக்கு போட்டியாக, ஏஐ கட்டமைப்பை உருவாக்கும் பணியில் இறங்கியுள்ளார்.

தொலைநோக்கும் விடாமுயற்சியும்: அமேசான் இன்று மிகப் பெரிய நிறுவனமாக இருக்கலாம், ஆனால், தொடக்க காலத்தில் விற்பனை அதிகம் இருந்தபோதிலும், லாபம் ஈட்டும் நிறுவனமாக அது இல்லை. இதனிடையே டாட் – காம் குமிழியின் (dot - com bubble) போது ஐடி நிறுவனங்கள் மிகப்பெரும் சரிவைச் சந்தித்தன.

அமேசானும் அதிலிருந்து தப்பவில்லை. கடும் இழப்பைச் சந்தித்தார் பிசோஸ். ஆனால், அவர் பின்வாங்கவில்லை. தொலைநோக்கு அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருந்தார். இனி ஈ-கொமர்ஸ் தான் உலகின் வணிகத்தை தீர்மானிக்கப்போகிறது என்பதை உறுதியாக நம்பிய அவர், அமேசான் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தபோதிலும், அதை விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். அவரது கணிப்பு பொய்யாகவில்லை.

ஜெஃப் பிசோஸ் எதிர்காலப் போக்கை மிகத் துல்லியமாக கணித்து, அதில் களமிறங்கக்கூடியவர் என்பதற்கு அவரது விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான புளூ ஆர்ஜின் மற்றொரு உதாரணம். 1982-ம் ஆண்டு தன் பள்ளி இறுதி ஆண்டு விழாவில் பேசுகையில், எதிர்காலத்தில் மனிதர்கள் பூமியிலிருந்து வெளியேறி வேற்றுக்கிரங்களில் வசிக்கும் சூழல் உருவாகும் என்று தான் நம்புவதாக பிசோஸ் குறிப்பிட்டார். இன்று விண்வெளி ஆராய்ச்சியில் தீவிரமாக செயல்பட்டுவரும் தனியார் நிறுவனங்களில், அவரது புளூ ஆர்ஜின் நிறுவனமும் ஒன்று.

அமேசானின் வளர்ச்சி குறித்து வியக்கப்பட்டாலும், அந்நிறுவனத்தின் செயல் பாடுகள் சார்ந்து பல்வேறு விமர்சனங்களும் உண்டு. ஊழியர்கள் நடத்தப்படும் விதம் தொடர்பாக அமேசான் நிறுவனத்தின் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. பெரும் போராட்டங்களுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட அமேசான் ஊழியர் சங்கத்தில், 2022 ஏப்ரல் மாதம் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இணைந்தனர். அதேபோல், வாடிக்கை யாளர்களின் தரவு பாதுகாப்பு குறித்தும் அமேசான் மீது குற்றச்சாட்டுகள் உண்டு.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், மதுரையில் உள்ள வணிகர், தன் கடை அமைந்திருக்கும் எல்லைக்கு உட்பட்டே தன் பொருட்களை விற்க முடியும். ஆனால், இன்று அவரால் ஈ-கொமர்ஸ் தளங்கள் மூலம் நாட்டின் எந்த மூலையில் இருப்பவருக்கும் தன் பொருளை விற்க முடியும். அதேபோல், நுகர்வோரும் தங்கள் வீட்டில் இருந்தபடி, எந்த மூலையிலிருந்தும் தங்களுக்குத் தேவையான பொருட்களை எளிதில் வாங்க முடியும்.

சில்லறை வணிகத்தில் நிகழ்ந்திருக்கும் இந்த மாற்றம் உலகளாவிய பொருளாதாரத்தை உந்தித்தள்ளியுள்ளது. அதேபோல், தற்போது ஐடி துறை அடைந்துவரும் வளர்ச்சிக்கும் உலக அளவில் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் உருவாகி வருவதற்கும் அமேசானின் கிளவுட் கம்ப்யூட்டிங் சேவைக்கு முக்கியப் பங்கு உண்டு

ஹென்றி போர்டு உற்பத்தித் துறையில் நிகழ்த்திய புரட்சியோடு ஒப்பிடத்தக்கது, ஜெஃப் பிசோஸ் சில்லறை வணிகத்திலும் ஐடி துறையிலும் நிகழ்த்தியிருக்கும் புரட்சி!

# யாழ்ப்பாணத்துக்கும் வருகிறது இன்டிகோ

**2024 செப்டெம்பர் 1 ஆம்திகதி முதல் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தினசரி இடைவிடாத விமான சேவைகளை இன்டிகோ ஆரம்பிக்கவுள்ளது. கொழும்பை தொடர்ந்து, யாழ்ப்பாணம் இலங்கையில் ணுாஜ-ஷ்றுாலி பறப்பில் ஈடுபடவுள்ள இரண்டாவது பறப்பிடமாக அமைந்திருக்கும்...**

பவித்திரன்




இந்தியாவின் தெரிவுக்குரிய விமான சேவையான IndiGo, இலங்கையின் யாழ்ப்பாணத்தை தனது புதிய சர்வதேச ஆகாய வழித் தடமாக சேர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. நீண்டகாலமாக எதிர் பாக்கப்பட்ட இந்த அறிவிப்பு கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

2024 செப்டெம்பர் 1 ஆம்திகதி முதல் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தினசரி இடைவிடாத விமான சேவைகளை இன்டிகோ ஆரம்பிக்கவுள்ளது. கொழும்பை தொடர்ந்து, யாழ்ப்பாணம் இலங்கையில் IndiGo பறப்பில் ஈடுப வுள்ள இரண்டாவது பறப்பிடமாக அமைந் திருக்கும்.

அதன் பரந்த வலையமைப்பில் ஒட்டு மொத்தமான 122 ஆவது பகுதியாகவும், 34ஆவதுசர்வதேசவிமானநிலையமாகவும் யாழ்ப்பாணம் அமைந்திருக்கும். இந்த மூலோபாய அறிவிப்பின் ஊடாக, இலங் கைக்கும் இந்தியாவுக்கும் இடையே காணப்படும் உறுதியான கலாசார மற்றும் வர்த்தக உறவுகள் மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், வணிகம், உட் கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆகாய இணைப்பு போன்றவற்றில் இணைந்த செயற்பாடுகளினூடாக அவை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

விமான சேவைகளுக்கான முற்பதிவுகள் 2024 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விமானப் பயணம் செப்ரெம்பர் 1 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இலங்கையின் பிரதான சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகையை கொண்ட சந்தையாக இந்தியா தொடர்ச்சியாக திகழ் கின்றது. 2024 ஜுன் மாதத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின்

எண்ணிக்கை மொத்த எண்ணிக்கை யில் 25.2% ஆக பதிவாகியிருந்ததுடன், 28,631 க்கும் அதிகமான பயணிகள் வந்திருந்தனர்.

2023 ஜுன் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்களவு உயர்ந்த பெறும தியாகும். யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்வதில் அதிக நாட்டம் காணப்படுகின்றது. அந்நிலையில், யாழ்ப்பாணத்துக்கு இன்டி கோவின் புதிய சேவை விஸ்தரிப்பு அறிவிப்பி னூடாக, பிராந்தியத்தினுள் இணைப்புத் திறனை மேம்படுத்தும்.

இன்டிகோ கொழும்புக்கு ஏற்கனவே விமான சேவைகளை முன்னெடுக்கும் நிலையில், பயணிகளுக்கு இலங்கையில் இரண்டாம் சந்தை அணுகல் வாய்ப்பை யாழ்ப்பாணம் ஏற்படுத்தும்.

இன்டிகோவின் சர்வதேச விற்பனைகள் தலைமை அதிகாரி வினய் மல்ஹோத்ரா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

'இலங்கையில் எமதுபுதிய விமான சேவைகள் பறப்பிடமாக யாழ்ப்பாணத்தை அறிவிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடை கின்றோம். இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக மற்றும் சுற்றுலா இணைப்புகளை மேம்படுத்தும் வகையில் இது அமைந் திருக்கும். சென்னைக்கும் யாழ்ப்பாணத் துக்கும் இடையிலான இந்த தினசரி விமான சேவைகளுக்கு மேலதிகமாக, இந்தியாவின் நான்கு விமான நிலையங்களிலிருந்து கொழும்புக்கு வாராந்தம் 30 பறப்பு சேவைகளை மேற்கொள்கின்றோம்.

75 நிமிடவிமான சேவையினூடாக, பயண நேரம் பெருமளவில் குறைக்கப்படும் என்பதுடன், இலங்கையின் யாழ்ப்பாணத்தை மிகவும் இலகுவாக சென்றடைவதற்கு உதவியாக அமைந்திருக்கும். எமது வாடிக் கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த இணைப்புத்திறன் மற்றும் அணுகல்திறனை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான தொடர்ந்தும் செயலாற்றுவதுடன், பரந்தளவு பிரயாணத் தெரிவுகளை வழங்கி புதிய பகுதிகளை இனங்கண்ட வண்ணமுள்ளோம்' என்றார்.

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பிரயாணத்துக்கான கேள்வி அதிகரித்த வண்ணமுள்ளதுடன், கடந்த ஆண்டின் ஒன்பது மாத காலப் குதியில் 21,000க்கும் அதிகமான பயணிகள் பயன்படுத்தியிருந்தனர்.

இன்டிகோவின் புதிய நேரடி விமான சேவையினூடாக, இந்த கேள்விக்கு தீர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கையின் சுற்றுலா மீட்சிக்கு முக்கிய சந்தையை திறந்துள்ளது. இலங்கையும், இந்தியாவும் இராஜதந்திர, கலாசார, சமய மற்றும் வர்த்தக உறவுகளை 2500 ஆண்டுகளுக்கு மேலாக பேணி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டிஜிட்டல் மயமாகும் வேளாண் துறை



எங்கும் எதிலும் டிஜிட்டல் மயம் நிகழ்ந்து வருகிறது. இந்தியாவில் இடம்பெறும் இந்த மாற்றம் இலங்கைக்கும் உதவும் என்பதால்அதுகுறித்துசுருக்கமாக இந்த வாரம் பார்ப்போம்.

2024-25 நிதியாண்டுக்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். இதில் வேளாண் துறைக்கான சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

குறிப்பாக, மாநில அரசுகளுடன் இணைந்து, 'அக்ரி ஸ்டாக்' எனப் படும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு செயல்படுத்தப்படும் என்றும் 400 மாவட்டங்களில் டிஜிட்டல் முறை பயிர்கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார். தற்போதைய நிலையில் இது வேளாண்மை துறைக்கு தேவைப்படும் மிக முக்கியமான ஒன்றாகும்.

அடுத்த 3 ஆண்டுகளில் 6 கோடி விவசாயிகளின் நிலங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக உத்தர பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டம் பிற மாநிலங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்ரி ஸ்டாக் (Agri Stack) என்பது விவசாயிகளின் விவரங்கள், நில ஆவணங்கள், காப்பீடு, கடன் மற்றும் பயிர் சாகுபடி மற்றும் அவர்களின் வருமானம் போன்ற அனைத்தையும் கொண்டிருக்கும் சேமிப்பு பெட்டகமாக இருக்கும்.

மேலும் இதற்கு தேவைப்படும் தரவுகள் அனைத்தும் இஸ்ரோ வழங்கக்கூடிய செயற்கைக்கோள் தரவுகள், செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், புவியிடம்சார் தகவல்கள் (Geospatial Data) மற்றும் தொழில்நுட்ப காட்சியளிப்பு (Visual Analytics) போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் மூலம் சேகரிக்கப்படும்.

அத்துடன் விவசாயிகள், அரசாங்க துறைகள், வேளாண் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் போன்றவைகளை ஒருங்கிணைக்கும் ஒரு டிஜிட்டல் தளமாகவும் அக்ரிஸ்டாக் செயல்படும்.

தற்போதைய நிலையில் விவசாயிகளின் அடையாள ஆவணங்கள் மற்றும் நிலம் தொடர்பான தகவல்கள் அனைத்தும் வெவ்வேறு துறைகளிடம் உள்ளன. அதனால் குறிப்பிட்ட மானியம் அல்லது இன்னபிற சலுகைகள் வழங்குவதில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகளை போக்கி விவசாயிகளின் தகவல்கள் அனைத்தும் ஒரே தளத்தில் இயங்கும் வகையில் அக்ரிஸ்டாக் இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் அக்ரி ஸ்டாக் வழியே விவசாயிகளுக்கு போதிய அளவிலான பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தி மேம்படுத்தும் வழிமுறைகள், தக்க சமயத்தில் முடிவு எடுக்க ஆலோசனைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் வகையிலான தகவல்களை உள்ளடக்கிய தளமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பானது ஒரு திறந்த தரவுநிலைகளை கொண்டதாகவும் எளிதாக அணுகும் வகையில் பொதுவான ஒன்றாகவும் இருக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இதன் மூலம் விவசாயிகள் பயிர் சாகுபடிக்கு திட்டமிடுவது, வேளாண் உபகரணங்கள், வேளாண் கடன், காப்பீடு, சந்தை விலை உள்ளிட்ட தகவல்களை அறிந்து கொள்ளும் தளமாகவும் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

வேளாண் துறையில் களமிறங்கி இருக்கும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு பேருதவியாக இருக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு நிதி வழங்கும் நிதி நிறுவனங்களுக்கும் அக்ரி ஸ்டாக் உதவியாகஇருக்கப்போகிறது.மத்தியவேளாண்மை அமைச்சகம், மாநிலங்களின் வருவாய் மற்றும் வேளாண்மைத் துறையுடன் இணைந்து, அக்ரி ஸ்டாக் தளத்தை மென்மேலும் மேம்படுத்தி எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட இருக்கிறது.

தனியார் நிறுவனங்களின் உதவியுடன் அக்ரி ஸ்டாக் தளத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சியிலும் மத்திய அரசு இறங்கியுள்ளது. மொத்தத்தில் இனி வரும் காலம் வேளாண்மைக்கும் டிஜிட்டல் காலம்தான்!

# இலங்கை அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை

**பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்றார்கள். இலங்கைக்கு தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.**

துரைசாமி நடராஜா



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு வருகை தந்து 200 வருடங்களாகிவிட்டது. இக்காலப்பகுதியில் இம்மக்கள் சிற்சில அடைவுகளை கொண்டுள்ளபோதும் இன்னும் பல விடயங்களில் பின்தங்கிய நிலைமையினையே வெளிப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததாகும். இவற்றுள் பொருளாதாரத்துறை என்பது முக்கியமானதாகும். ஒரு சமூகம் மேலெழும்புவதற்கும் பல்வேறு சாதக விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார அபிவிருத்தி மிகவும் இன்றியமையாததாகும். எனினும் மலையக சமூகத்தின் பொருளாதார நிலைமைகள் ஆரம்பகாலம் தொட்டே பின்நிலையில் இருந்து வருவது வருந்தத்தக்கதாகும். இந்நிலைமையானது இம்மக்கள் பல்துறை பின்னடைவை சந்திப்பதற்கு உந்துசக்தியாகியுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்றார்கள். இலங்கைக்கு தேசிய வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். தேயிலைத் தொழிற்றுறை, ஆடைத் தொழிற்றுறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்று பலதுறைகளிலும் ஈடுபடும் பெண்கள் தம்மை வருத்திக் கொண்டு நாடுயர பாடுபடுகின்றார்கள். எனினும் இம்மக்களின் நலன்கள் எவ்வாறு பேணப்படுகின்றன?

தேசிய நீரோட்டத்தில் இவர்களுக்கான வாய்ப்புகள் எவ்வாறுள்ளன? இம்மக்களின் தொழில் உரிமைகள் உரியவாறு உறுதிப்படுத்தப்படுகின்றனவா? அரசதுறை தொழில் வாய்ப்புக்களில் எம்மவர்கள் உரியவாறு உள்ளீர்க்கப்படுகின்றனரா? என்றெல்லாம் வினவுகையில் விடை திருப்தியானதாக இல்லை. இந்நிலையில் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே வழிநடத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

### சிறுதோட்ட அபிவிருத்தி

தேயிலைத் தொழிற்றுறையைப் பொறுத்தவரையில் அரசாங்கம் சிறுதோட்ட அபிவிருத்தியில் காட்டும் அக்கறையை பெருந்தோட்ட அபிவிருத்தியில் காண்பிக்கத் தவறி விடுகின்றது. இலங்கையில் சுமார் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான சிறுதோட்ட உரிமையாளர்கள் காணப்படும் நிலையில் சிறுதோட்டங்களின் அபிவிருத்தி கருதி அரசாங்கம் கடன் உதவிகள், சலுகை விலையில் உரப்பகிர்வு உட்பட பல்வேறு மானியங்களையும் வழங்கி வருகின்றது. இதனால் சிறுதோட்டங்களின் உற்பத்தி அதிகரித்துள்ளதோடு உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரமும் அதிகரித்துள்ளது. எனினும் பெருந்தோட் டங்களின் மீதும், தொழிலாளர்களின் மீதும் அரசாங்கம் பாராமுகம் காட்டிவருவதாக கண்டனங்கள் மேலெழுந்து வருகின்றன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிலைமைகள் ஆரம்ப காலத்திலிருந்தே திருப்தியானதாக காணப்படவில்லை. இம்மக்களின் வருமானத்துக்கும், செலவுக்கும் இடையே பாரிய விரிசல் நிலை காணப்படுவதையே அவதானிக்க முடிந்தது. 1944 க்கு முன்னர் ஆண்தொழிலாளி ஒருவருக்கு நாட்சம்பளமாக 41 சதமும், பெண் தொழிலாளி ஒருவருக்கு 37 சதமும், சிறுவர்களுக்கு 25 சதமும் வழங்கப்பட்டது.

1967 இல் ஆண் தொழிலாளர்களுக்கு 3 ரூபா ஒரு சதமும், பெண் தொழிலாளர்களுக்கு 2 ரூபா 45 சதமும், சிறுவர்களுக்கு 2 ரூபா 13 சதமும் வழங்கப்பட்டன. 1987 இல் ஆண், பெண் இருபாலருக்கும் சமசம்பளமாக ரூபா 33.92 உம், 1989 இல் 37 ரூபாவும் வழங்கப்பட்டது. இவற்றோடு தொழிலாளர்களின் வருமானம் பற்றிய ஆய்வில் 1979 க்கு முன்னர் கிடைத்த உணவுமானியங்கள் முக்கியமானவை. 1979 இல் வறுமை நிவாரண முறையாக 'உணவு முத்திரை' அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1965 ம் ஆண்டு வரை அரசாங்கம் தொழிலாளர்களுக்கு அரிசி மானியத்தை வழங்கியது. அரசாங்கம் அரிசியின் உண்மை விலையில் ஒரு பகுதியினை செலுத்தியது. இச்சகாய விலை காரணமாக 1960 இல் தொழிலாளியொருவருக்கு ரூபா 61.36 உம், 1965 இல் ரூபா 65.52 உம் இலாபமாகக் கிடைத்தது. 1967 முதல் அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இதேவேளை 1970 முதல் 1978 வரை அரிசி இலவசமாகவும், மானிய விலையிலும் வழங்கப்பட்ட நிலையில் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தொழிலாளர் குடும்பமொன்று மாதாந்தம் 1974 இல் ரூபா105 ஐயும், 1979 இல் ரூபா 53.33 இனையும் இலாபமாக பெற்றுக் கொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கருதி கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னதாக தொழிலாளர்களின் சம்பளம், சம்பள நிர்ணய சபையின் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த சம்பளத்தை தீர்மானிப்பதே சம்பள நிர்ணய சபையின் வரம்புக்குட்பட்ட அதிகாரம் ஆகுமென்று மூத்ததொழிற் சங்கவாதி எஸ்.இராமநாதன் சுட்டிக்காட் டுகின்றார்.

மேலும் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொள்வதில்



எதிர்கொள்ளப்பட்ட அனுபவ ரீதியான பிரச்சினைகள் காரணமாகவே இதற்கு மாற்றீடாக கூட்டு ஒப்பந்த முறை சிறந்ததாகக் கருதப்பட்டதாகவும் அவர் கூறுகின்றார். எவ்வாறெனினும் பின்னர் கூட்டு ஒப்பந்த முறையும் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளானமை தெரிந்ததேயாகும். கூட்டு ஒப்பந்தத்தை அடிமைச் சாசனம், மரணப் பொறி என்றெல்லாம் முக்கியஸ்தர்கள் விமர்சித்திருந்தனர்.

அத்தோடு கூட்டு ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துள்ளதால் இச்சரத்துக்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மேலும் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் தொழிற்சங்கவாதிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில் தோட்ட நிர்வாகங்கள் மற்றும் கம்பெனிகள் கூட்டு ஒப்பந்தத்தை மீறிய பல நிகழ்வுகள் அடிக்கடி பதிவாகும் நிலையில் தொழிலா ளர்கள் இதனால் கொதித்தெழுந்த சம்பவங்களும் அநேகமுள்ளன.

இதனிடையே கூட்டு ஒப்பந்தம் நன்மைகள் பலவற்றுக்கு வித்திட் டுள்ளதாகவும் கருத்துக்கள் முன்வைக் கப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் தேசிய மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய செய்து கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்த முறை தொழிலாளர்களுக்கு சாதகமாக அமையாதவிடத்து, அதைவிட சிறந்த முறையிலான கூடிய தன்மை தரக்கூடிய வழிமுறையைப் பின்பற்ற தொழிற்சங்கங்கள் ஆலோசிக்க முடியும் என்றும் பதிவுகள் உள்ளன.

### பங்கீட்டு முறை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயமானது தொடர்ச்சியாக இழுபறியாகவே இருந்து வருகின்றது. தொழிலாளர்கள் தமது சம்பள அதிகரிப்பு கருதி பல்வேறு போராட்டங்களிலும் கடந்த காலங்களில் ஈடுபட்டனர். மெதுவாக பணி புரிதல், கொழும்புக்கு தேயிலையை கொண்டு செல்லவிடாது தடுத்து நிறுத்துதல், வேலைநிறுத்தம் உள்ளிட்ட பல போராட் டங்களும் இதில் உள்ளடங்கும். எனினும் இப்போராட்டங்களின் மூலமாக தொழிலா ளர்கள் எதிர்பார்த்த நியாயமான சம்பள உயர்வு கிடைக்காத நிலையில் சொற்ப சம்பள அதிகரிப்புகளே பெற்றுக்கொள் ளப்பட்டமையும் கசப்பான உண்மையாகும்.

தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் அதிகளவு இலாபத்தை பெற்றுக் கொள்கின்றபோதும் தொழிலாளர் நலன்களில் அவை கிஞ்சித்தும் அக்கறை செலுத்துவதில்லை. உழைப்புக்கேற்ற ஊதியத்தை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில்லை என்று தொழிற்சங்க தரப்பினர் கூறிவருவதையும் அவதானிக்க முடிகின்றது. எனினும் கம்பனியினர் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

'பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழுள்ள தோட்டங்களில் சுமார் ஒரு இலட்சத்து ஆயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களே பணியாற்றி வந்தபோதும் இத்தொழிலோடு மறைமுகமாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை சுமார் 20 இலட்சமாகும். இத்தனை பேரின் வாழ்வாதாரம் தங்கியிருக்கும் இத்துறையை நாம் மிகுந்த நெருக்கடிக்கு மத்தியிலேயே கொண்டு நடாத்துகின்றோம்.

150 வருட வேதனை முறையை மாற்றியமைக்க வேண்டுமெனவும், வருமான பங்கீட்டு முறையை கொண்டு வருமாறும் தொழிற்சங்கங்களை வலியுறுத்தினோம். ஆனால் அவர்கள் அது குறித்து அக்கறை செலுத்தவில்லை. தொழிலா ளர்களை அதே நிலையில் வைத்திருக்கவே தொழிற்சங்கங்கள் ஆசைப்படுகின்றன. எமது திட்டத்தின் கீழ் பல தோட்டங்களில் மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வேதனம் பெறும் தொழிலாளர்கள் உள்ளனர்' என்று கலாநிதி ரொஷான் ராஜதுரை அண்மையில் தெரிவித்திருந்தார். இதேவேளை தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிநிலை, உற்பத்தி செலவு அதிகரிப்பு என்பன தொடர்பிலும் கம்பனி தரப்பு செய்திகள் வலியுறுத்தியுள்ளன. 2020 இல் 300 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் 2022 இல் 251 மில்லியன் கிலோகிராம் தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டது. என்றபோதும் தொழிலாளர்களின் நலன்களுக்கு தொடர்ந்தும் வலுசேர்த்து வருவதாக கம்பனிகள் தெரிவிக்கின்றன.

பெருந்தோட்டக் கம்பனிகள் வெளியார் உற்பத்தி முறை தொடர்பில் அதிகமாக வலியுறுத்தி வருகின்றன. இம்முறையின் மூலமாக அதிகரித்த வருவாயை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது கம்பனிகளின் கருத்தாக உள்ளது. இதேவேளை தொழிலாளர்கள் காணியு ரிமையை பெற்றுக் கொள்வதற்கு அடித்தள மாக வெளியார் உற்பத்தி முறை அமையும் என்று புத்திஜீவிகள் தெரிவிக் கின்றனர்.


இதனிடையே வெளியார் உற்பத்தி முறை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஷ்வரன் பின்வருமாறு கருத்து தெரிவிக்கின்றார். 'தோட்டக் கம்பனிகள் அவுட்குரோ முறைமையில் செல்வதற்கு முற்படுகின்றன. அதாவது ஆயிரம் தேயிலைச் செடிகளை கொடுத்து விட்டு தொழிலாளர்களிடமிருந்து 50 ரூபாவுக்கு கொழுந்து வாங்கும் முறையை ஏற்கமுடியாது. பெருந்தோட்டக் காணிகள் குத்தகை அடிப்படையில் தோட்டத் தொழிலா ளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். 10 நாட்கள் ஊழியர் சேமலாப நிதி (சிஐணய்), ஊழியர் நம்பிக்கை நிதி (சிவீய்) என்பவற்றுடன் தோட்டத்தில் வேலை அவசியம். எஞ்சியுள்ள நாட்களில் அவுட்குரோ முறைமைக்கு செல்லலாம். தனியார் உரிமையா ளர்களிடமிருந்து வாங்கும் விலைக்கே தொழிலாளர்களிடமிருந்தும் கொழுந்து வாங்கப்பட வேண்டும்' என்று ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள விடயம் இப்போது மீண்டும் பேசுபொருளாகி இருக்கின்றது. சமகால விலைவாசி அதிகரிப்பு மற்றும் வாழ்க்கை செலவு மேலோங்குகை என்பவற்றுக்கு மத்தியில் தொழிலாளர்களுக்கு உடனடியாக சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை பல தரப்பினரும் வலியு றுத்தி வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக 1000 ரூபா வழங்கப்படுவது எவ்வகையிலும் நியாயமாகாது.



# பயத்தை வெற்றிகொண்டால்தான் முயற்சிகளில் வெற்றிபெற முடியும்

**நம்முடையஇலக்குகளை அடையாமல் போவதற்கு நம் திறமையின்மை ஒருபோதும் காரணமாக இருப்பதில்லை.நம்முடைய நம்பிக்கையின்மையே காரணமாக இருக்கிறது. இந்த நம்பிக்கையின் மையைஉருவாக்கும்எதிரி நமக்குள்ளே இருக்கும் பயம்தான்.**




இந்தப் பிரபஞ்சத்தில் பிறக்கும் ஒவ்வொருநபருக்கும்சிறந்தவாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பு என்பது சரிசமமாக இருக்கவே செய்கிறது. அதற்குத் தேவை யான எல்லாத் திறமைகளும் சக்தியும் நமக்கு தரப்பட்டிருக்கிறது. நம் திறமையை உபயோகித்து நம் இலக்கை அடையத் தடையாக ஒரே ஓர் எதிரிதான் நமக்குள் இருக்கிறது. அந்த எதிரி, பயம்!

நம்முடைய இலக்குகளை அடையாமல் போவதற்குநம்திறமையின்மைஒருபோதும் காரணமாக இருப்பதில்லை. நம்முடைய நம்பிக்கையின்மையே காரணமாக இருக்கிறது. இந்த நம்பிக்கை யின்மையை உருவாக்கும் எதிரி நமக்குள்ளே இருக்கும் பயம்தான்.

இந்த பயத்துடன் போராடி முதலில் வெல்லுங்கள்; நீங்கள் மிகப் பெரும் வெற்றியை அடைவீர்கள் என்கிறது 'வின் யுவர் இன்னர் பேட்டில்ஸ்' (Win Your Inner Battles) என்கிற புத்தகம். நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் டேரியஸ் ஃபோரெக்ஸ் என்பவர் இந்தப் புத்தகத்தை எழுதியிருக் கிறார்.

சரியான முடிவை எடுக்காமல் போய்விடுவோமோ, வாழ்க்கையில் தோல்வி அடைந்துவிடுவோமோ, தோற்றுவிட்டால் எந்த முகத்தை வைத்துக்கொண்டு இந்த உலகத்தை எதிர்கொள்வது, மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பது போன்றவற்றுக்கே நாம் பயப் படுகிறோம்.

இந்த பயத்துடன் சண்டையிட்டு அதை வெல்லாமல், வாழ்க்கையில் நீங்கள் ஜெயிக்க முடியாது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் வாழும் உலகில் உங்களுடைய எதிரியைப் பற்றியும் உங்களைப் பற்றியும் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தால், நீங்கள் செய்யப்போகும் சண்டையின் முடிவு எப்படி இருக்குமோ என நீங்கள் பயப்பட வேண்டியதில்லை.

பயம் என்பது நம் வாழ்க்கையை ஓர் அனுபவமாகப் பார்த்து வாழவிடாமல் நமக்குள் ஒரு போர்க்களத்தை உருவாக்கி விடுகிறது. ஒரு காலத்தில் பயம் என்பது நம்மைப் பாதுகாத்துக்கொள்ள உதவும் விஷயமாக இருந்தது. இன்றைக்கு பயம் நம்முடைய சுதந்திரத்துக்குத் தடை போடும் எதிரியாக உருவெடுத்துவிட்டது. இதனாலேயே இந்தத் தடைகளை எதிர்கொள்ளும் பலரும் சவால்களை எதிர்கொள்ளும் தைரியத்தை இழந்து எந்த ஒரு காரியத்தையும் இறுதிவரை செய்து முடிக்காமல் பாதியிலேயே கைவிட்டுவிடுகின்றனர். பயமில்லா வாழ்க்கை வாழ்வது சாத்தியமே இல்லை என்று நீங்கள் நினைத்தமாத்திரத்திலேயே நீங்கள் தோல்வி யைத் தழுவிவிடுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்கிறார் ஆசிரியர்.


"வாழ்க்கையில் நாம் ஓரளவு வெற்றி கண்ட பின்னும்கூட நாம் தகுதியான மனநிலையில் இல்லாவிட்டால், மகிழ்ச்சியாக இருக்க முடியாது. ஏனென்றால் நம்முடைய மனம் சரியாக இல்லாவிட்டால் நமக்கு திருப்தி என்பது கிடைக்கவே கிடைக்காது. இன்னும் சொல்லப்போனால் இந்த உலகில் நிறைய பேர் அபரிமிதமான திறமையுடன், நல்ல குணங்களுடன், வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். ஆனாலும், அவர்கள் மன திருப்தி இல்லாமலேயே வாழ்கிறார்கள்.

உங்கள் வாழ்க்கையையே பாருங்கள். உங்கள் திறமைக்கேற்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தாலுமே, என்னடா இந்த வாழ்க்கை என்ற எண்ணம் அவ் வப்போது வந்துபோகிறதுதானே? அப்படி அடிக்கடி வந்துபோனால் அது சரியான நிலைமை இல்லை.

ஒரு சாதாரண மனிதன் அன்றாட பணிகளை முடித்து நாளின் இறுதியில் அயர்ச்சியடைந்து போகிறான். ஆனால், இரவு தூங்கி எழுந்த வுடனேயே அவன் மறுபடியும் புத்துணர்ச்சி யுடன் அடுத்த நாளை தொடங்குகிறான். வருடத்தில் ஓரிரு முறை வாழ்க்கை கொஞ்சம் சலிப்புத்தட் டுவதைப் போல தோன்றும். இது மனித வாழ்வில் சகஜம்தான். ஆனால், என்னடா இந்த வாழ்க்கை என்கிற எண்ணம் அடிக்கடித் தோன்ற ஆரம்பித்தால் அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

காரணம், வாழ்க்கையில் சலிப்புத்தட்டும் எண்ணம் அடிக்கடி வரத் தொடங்கினால், 'இதெல்லாம் நமக்கானது இல்லை' என்று ஒதுங்கிக்கொள்ள ஆரம்பிக்கிறோம். இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போனால் வாழ்க்கை சுவை யற்றதாகி, 'ஏன்தான் பொழுது விடிகிறதோ...' என்று நினைக்கும் அளவுக்கு மனதில் கேள்விகள் தோன்ற ஆரம்பித் துவிடும்.

இந்த நிலையைத் தவிர்க்க நாம் முதலில் நமக்குள் நடக்கும் போராட்டத்தில் வெல்ல வேண்டும். ஏனென்றால், நமக்குள்




இருக்கும் இந்தப் போராட்டத்தை வென்றால்தான் நாம் வெளியே எதிர்கொள்ளும் சவால்களைத் தோற்கடிக்கத் தேவையான சக்தியானது நம்மிடம் அபரிமிதமாக இருக்கும். இது ஒரே நாளில் நடந்துவிடக்கூடிய காரியமில்லை. இதற்கு நீண்ட நாள்களாகலாம். ஆனால், ஏதாவது ஓர் இடத்தில் இந்தப் போராட்டத்தை நாம் ஆரம்பித்தே ஆகவேண்டும்.

எதையும் எதிர்கொள்ளத் தேவையான மனஉறுதியை நாம் உருவாக்கிக்கொள்ளப் பழக வேண்டும்.

ஒரு விமானத்தில் செல்கிறீர்கள். விமானம் மோசமான வானிலை காரணமாக குலுங்குகிறது. உங்கள் மனதை பயம் கவ்விக் கொள்கிறது. இதில் கவலைப்பட ஒன்றுமில்லை. இது அடிக்கடி நடக்கும் இயல்பான விஷயம் தான். உங்கள் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடக்கிறது. அதில் நீங்கள் பேச பயப்படுகிறீர்கள். ஆனால், இது இயல்பான விஷயமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் நபர்களில் நீங்களும் ஒருவராக இருந்தால், உங்களுக்கு உங்களுடைய அடிப்படையான பயங்கள் குறித்த புரிந்துகொள்ளல் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகும்.

எப்போதெல்லாம் உங்களை பயம் கவ்வுகிறதோ, அப்போதெல்லாம் வேர்த்துக் கொட்டும். இதயம் படபடவென்று வேகமாகத் துடிக்கும். சில சமயம், மூச்சுவிடக்கூட சிரமமாக இருப்பதைப்போல் தோன்றும். இவையெல்லாம் அடிக்கடி வருகிறது என்றால் என்ன அர்த்தம்? நாம் நோர்மலாக இல்லை என்றுதான் அர்த்தம்.

இதில் நமக்குள் இருக்கும் எதிரி எப்படி வேலை செய்கிறான் என்பதை நாம் புரிந்து கொள்வது மிக மிக அவசியம். பயம் எப்படி இருக்கும், பயந்தால் நாம் என்ன செய்வோம், ஸ்ட்ரெஸ் மற்றும் ஏக்கம் என்கிற இரண்டையும் என்ன மாதிரியாக நாம் உணர்வோம் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும். நாம் ஏன் இப்படி உணர்கிறோம்? அதுதான் தெரியாது. இதற்கு முதலில் நம்முடைய மூளை எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் ஏன் பயத்தை உணர்கிறோம் என்பதையும் புரிந்துகொண்டால் நாம் நமக்குள்ளே இருக்கும் எதிரியுடன் போர் புரிய ஆரம்பிக்கலாம்” என்கிறார் ஆசிரியர்.

“பயமே சாதனைகளைச் செய்யவிடாமல் நம்மைத் தடுக்கிறது. இலக்குகளையும் கனவுகளையும் அடைவதற்கான தடைகளை உருவாக்குகிறது. இதனாலேயே எடுத்த காரியத்தில் வெற்றிபெறுவது என்பதெல்லாம் சிலருக்கு மட்டுமே உரித்தானது என்று நாம் நினைத்து ஒதுங்க ஆரம்பிக்கிறோம். கூடுதலாக, அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் வேண்டும். அவர்களெல்லாம் அதிர்ஷ்டசாலிகள் என்று நாம் நினைத்துக் கொள்கிறோம். இது தவறு. செய்ய நினைத்ததை செய்து முடித்தவர்கள், அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று முடிவு செய்து செயல்பட்டவர்களே அன்றி வேறு எதுவும் அவர்களை வெற்றி காணச் செய்துவிடவில்லை.

வாழ்க்கை என்பது நாம் எடுக்கும் முடிவுகளால் ஆனது எனில், பயந்து செயலற்றுக் கிடப்பதும் நாம் எடுக்கும் முடிவுதானே? இதனாலேயே நமக்குள் இருக்கும் எதிரியான பயத்தை நாம் வெல்ல வேண்டும்.

பயத்தை வெல்ல இனிமேல் ஒரு கணமும் தாமதிக்காமல் நாம் செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? இனி நாம் மற்றவர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். யாரும் நம்மை வழிநடத்தக் கூடாது. நாம் உருவாக்குதலை செய்ய வேண்டும். யாரோ உருவாக்கியதை நாம் உபயோகித்துக் கொண்டிருக்கக் கூடாது. நேர்மறை எண்ணங்களுடன் திகழ வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விரட்டியடிக்க வேண்டும். பிரச்னைகளைத் தீர்ப்பவராக இருக்க வேண்டும். இதில் பிரச்னை, அதில் பிரச்னை என்று குறை சொல்பவராக இருக்கக் கூடாது. சக்தி வாய்ந்த நபராக இருக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் செய்ய ஆரம்பித்தால் நாம் நினைக்கும் விஷயங்களைச் செய்வதற்கான துணிச்சல் நம்மிடத்தில் உருவாகிவிடும்.

இதன்மூலம் மனஉளைச்சல், அழுத்தம், ஏக்கம், வலி, காயப்படுதல், சோகம் என அனைத்தும் நம்மை விட்டு விலகிச் சென்றுவிடும். பயமில்லா மகிழ்ச்சியானதொரு வாழ்க்கையை நம்மால் வாழ முடியும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற அனைவருமே தடைகளை உடைத்து முன்னேறத் தெரிந்தவர்களே. தடைகளைத் தடைகளாகப் பார்க்க எது காரணமாகிறது? பயம்தான். பயம் நம்முடன் போரிட்டு நம்முடைய நம்பிக்கையை வீழ்த்தி விடுகிறது. இந்தக் காரியத்தைச் செய்ய நம்மால் முடியுமா என்கிற ரீதியில் சிந்திக்க வைத்துவிடுகிறது. இந்தச் சிந்தனையின் காரணமாக தோல்வி பற்றி நினைத்து அச்சம் கொள்கிறோம். அதனாலேயே எந்த ஒரு காரியத்தையும் செய்வதற்குத் தயங்க ஆரம்பிக்கிறோம். இதனால் எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பித்த உடனேயே வரும் சின்னச் சின்ன தடைகளையும் சவால் களையும் கண்டு கலங்கி உடனடியாக முயற்சிகளைக் கைவிட்டுவிடுகிறோம்.

பயப்படுவது மனித இயல்பு. பயத்தை வெல்வது என்பது ஒன்றே இதற்கான வழி. பயத்தை வெல்ல நாம் ஏன் பயப்படுகிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், நமக்குள்ளே தோன்றும் பயம் என்கிற எதிரியை வெல்ல வேண்டிய போர் வீரன் நாமேதான், வேறு யாருமல்ல” என்கிறார் ஆசிரியர்.

வாழ்க்கைக்குப் பொறுப்பேற்க வேண்டிய தன் அவசியம், சூழ்நிலையை ஆராய்ந்து அதற்கேற்ப நடைமுறைகளில் முன்னேற்றம் காண்பது எப்படி, நம்மால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்கள் குறித்து கவலைப்படாமல் இருப்பது எப்படி, நம்பிக்கை மற்றும் தகுதி என்ற இரண்டையும் வளர்த்தெடுப்பது எப்படி, தவறான முடிவு என்கிற ஒன்று இல்லை என்பதைப் புரிந்து கொண்டு செயல்படுவது எப்படி என்பது குறித்துத் தெளிவாக விளக்குகிறது இந்தப் புத்தகம்.

“இந்த உலகத்துக்கு பயமில்லா மனிதர்கள் (தலைவர்கள்) அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். உங்கள் குடும்பத்தில், அக்கம் பக்கத்தில், நட்பு வட்டத்தில், அலுவலகத்தில் என சுற்றுமுற்றும் பாருங்கள். எத்தனை பயமில்லாத மனிதர்கள் (தலைவர்கள்) இருக்கிறார்கள் என்று. பயத்தின் ஆதிக்கம் இந்த உலகில் எத்தகையதாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரியவரும். இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளைக் கையாண்டு உங்களுக்குள்ளே இருக்கும் எதிரியான பயத்தை வென்று ஒரு தலைசிறந்த தலைவராக முயலுங்கள்” என்று சொல்லி முடிக்கிறார் ஆசிரியர்.

பயத்தை வென்று வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்வது எப்படி என்பதை விளக்கும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன் பெறலாம்!

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2024இல் வெளியிடப்பெற்றது.